8-3-1952 M.V.M M BANGALORE


# போர்வாள்

வாள் 5 வீச்சு 24

8-3-52 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:
காஞ்சி. மணிமொழியார்
கா. இளஞ்செழியன் B.A.Hons

துணை ஆசிரியர்:
காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை அணா 2


# வெற்றி வீரர்களுக்குப் பாராட்டு!

## சென்னையில் மாபெரும் பொதுக்கூட்டம்

### அறிஞர் அண்ணாவின் வீரமுழக்கம்:
### எம்.எல்.ஏ.க்களின் உறுதிமொழி.

★

"ஒவ்வொரு நாட்டிலேயும், சரித்திரம், சிற்சில சமயங்களிலே, உரத்த குரலிலே பேசுவதுண்டு. அப்படி அது பேசும்போது, அது எந்தக் காலத்தில் பேசுகிறதோ, அந்தக் காலத்தில் வாழ்பவர்களுக்குக்கூட அதன் குரல் மிகத் தெளிவாகக் கேட்கும். இங்கிலாந்து நாட்டிலே ஒரு முறை சரித்திரம் அப்படிப் பேசிற்று. அதன் விளைவுதான் கொடுங்கோல் தர்பார் செலுத்திவந்த முதலாம் சார்லஸின் தலை பறிபோயிற்று. பிரான்சு நாட்டிலே ஒரு முறை சரித்திரம் பேசிற்று. அதன் முடிவுதான் ஏழை மக்களைக் கசக்கிப் பிழிந்துவந்த எதேச்சாதிகாரி லூயியின் பரிதாப மரணம். ரஷ்ய நாட்டிலே

(4-ம் பக்கம்பார்க்க)



# இதுதான் வாழ்க்கை!

★

## ஒரு கடிதம்!

★

மூலம் (உருது): ஸஜ்ஜாத் ஸாகிர்
மலையாளத்தில் தந்தது: 'சாகித்யம்'
தமிழாக்கம்: இரா. இளஞ்சேரன்.

[ஸஜ்ஜாத் ஸாகிர் மறுமலர்ச்சி எழுத்தாளர்களுள் ஒருவர். அநேக சிறுகதைகளும், ஒரு நாவலும் எழுதியுள்ளார். ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த இவர் லண்டன் ஆக்ஸ்போர்டு கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர். ஒரு பொதுவுடமை வாதியுங்கூட. 1940-ல் இவர் லக்நோ சிறையிலிருந்தபோது, இவருக்கு முதல் குழந்தை பிறந்தது. அப்போது தன் துணைவியாருக்கு எழுதிய கடிதமே இது. பிரிவினைக்குப் பின் இவர் பாகிஸ்தான் பொதுவுடமைக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர். ராவல்பிண்டி சதி வழக்கில் சம்பந்தப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு இப்போது சிறையிலிருக்கிறார்]

"நீ என் கைகளில் தவழ விடுவதற்காக, முதன் முதலாக நம் குழந்தையைக் கொண்டுவந்த நாள் உனக்கு நினைவிருக்கிறதா? நீ அவளை மூடிப் பொதிந்து, கையிலேந்தியபடி அன்று சிறைக்கு வந்தாய் என்னைப் பார்க்க. அந்த இரும்பு கம்பிகளிடையேயிருந்து நான் வெளியே வந்தபோது என்ன பேசுவதென்றறியாமல் நாம் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தோம்.

முதலில் மென்மையான ஒரு மந்தஹாசம் உனது மொக்கு உதடுகளில் குவிந்தது. பிறகு கண்களிலே நீர் நிரம்பியது. அப்போது, துப்பறியும் இன்ஸ்பெக்டரும், சிறை அதிகாரியும் வேறு பக்கமாகத் திரும்பிக் கொண்டனர். நமது 'அந்த' நிலை அவர்களுக்கு வேதனையைக் கொடுத்ததோ, என்னவோ? உன்னால் சிரிக்காமலிருக்க முடியவில்லை. சிரிப்பிலே கூட பயங்கரமான சினத்தைக் காட்ட முடியும் என்ற உண்மையை தான் அப்போது தான் அறிந்தேன்.

அந்தக் குழந்தை—தன் சின்னஞ்சிறு—சிங்காரமான கைகளை ஆட்டியது. அலங்காரமான பொம்மையைக் காணும்போது ஒரு சிறுவனின் இளம் உள்ளம் எவ்வளவு ஆனந்தமடையும்! அதே மென்மையான இன்பமான உணர்ச்சிதான் என் உள்ளத்திலும் உருவாயிற்று.

"உங்கள் குழந்தை, இந்தாருங்கள்." எனக் கூறியபடி அந்த 'அரும்பை' என்னிடம் கொடுத்தாய். அவளை நான் அப்படியே அணைத்துக் கொண்டேன், ஆசையோடு. எவ்வளவு அழகான சிறு குழந்தை! அந்த ஆனந்தப் பெருக்கில் நான் என்னையே மறந்து விட்டேன், 'என்ன செய்வது என்ன பேசுவது' என்ற உணர்வே எனக்கில்லை.

"நீ நலந்தானே! ஏதோ வாட்டமடைந்திருப்பது போல் தோன்றுகிறதே!"-என்ன பேசுவது என்று அறியாத அந்நிலையில் உள்ளத்திற்கும் உதட்டிற்கும் சம்பந்தமில்லாத அந்தக் கேள்வியை உதிர்த்தேன். உன்னிடம் இதைக் கேட்கத்தான் என்னால் முடிந்தது. ஆனால் நமது அன்பு நெஞ்சங்களில் ததும்பியிருந்த தாபத்தை—ஆசைக் கனவுகள் சிருஷ்டித்த இன்பமான நினைவுகளைப் பற்றிப் பேச நம்மால் இயலவில்லை. நமது சிந்தனைக்கும் செயலுக்கும் பொருத்தமேயிருக்கவில்லை, அன்று. பல விஷயங்களைப்பற்றி நாம் பேசினோம். அப்போது எவ்வளவு கொடூரமான—விவரிக்கமுடியாத வேதனையை நாம் அனுபவித்தோம். ஒருவருக்கொருவர்—ஆறுதலளிக்கமுடியாத அந்த நிலை!......இப்போது நினைத்தாலும் நெஞ்சு எரிகிறது!

நமது சந்திப்பிற்கு அனுமதிக்கப் பட்டிருந்த ஒரு மணி நேரம், கொஞ்சம், கொஞ்சமாகக் கரைந்து கொண்டிருந்தது. யாரோ ஒருவர் நமதருகே வந்து நின்றார்—வாழ்க்கைப் புயலில் அடிபட்டு ஓய்ந்துபோன ஒரு மனிதன். மஞ்சள் நிற ஆடையும், சிவந்த தொப்பியையும் அவன் அணிந்திருந்தான். ஏனோ நாமிருவரும் நடுங்கினோம்! அவனுடைய முகத்தைக் கூர்ந்து பார்த்தோம். ஆனால் அவனது குழிவிழுந்த கண்கள்!...என் கையிலிருந்த 'பேகம் பொம்மை'யையே பார்த்துக் கொண்டிருந்தன!.........அவனது உள்ளத்தில் குதியாட்டம் போடும் களிப்பைக் காட்டும் கண்ணாடியாயிருந்தன, அந்த விழிகள்!

"குழந்தையை என்னிடம் கொடுங்கள். நீங்கள் பேசி முடியும் வரை நான் வைத்துக் கொள்கிறேன்."—அவன் கூறினான், அன்பொழுக—ஆர்வம் ததும்ப. உன்னிடமிருந்து அந்த 'வாயில்லாப்பூச்சியை' வாங்கி வாரியணைத்துக் கொண்டான். நம்முடைய இதயங்களில் அழுத்திக் கொண்டிருந்த துன்பபாரம் அகற்றப்பட்டதைப் போலத் தோன்றியது, நமக்கு.

குழந்தைகளைக் களிப்பிலாழ்த்தும் பல ரக 'ஓசைகளை' அவன் எழுப்பினான். நமது பாப்பாவின் சிறிய நயனங்கள் விரிந்தன.

'குழந்தை சிரிக்கிறது! எவ்வளவு அழகான பெண்! இவளுக்கு ஒரு குறையும் வராது. இவளது சிறிய இதழ்கள், உங்களது உதடுகளைப் போலவே இருக்கின்றன." என்று என்னைப் பார்த்துக் கூறிவிட்டு அந்தக் கைதி சிரித்தான், துன்பத்திலே, இன்பத்தைக் காண்பவனைப் போல.

"வெப்பமான காலம்! இவனுக்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள். குழந்தைகள் அடிக்கடி தண்ணீர் குடித்தால் அழாமலிருக்கும். ஐயாவைப் பார்த்துவிட்டு உடனே வெயிலில் நடந்து போகாதீர்கள்! உங்களது பங்களா இங்கிருந்து நாலைந்து மைல் தூரமிருக்கிறதென்று ஐயா என்னிடம் சொல்லியிருக்கிறார். வருந்தாதீர்கள்! வெகு விரைவில் ஐயா விடுதலையாவார்." மூச்சு விடாமல் அவன் பேசிமுடித்தான். அவனது பேச்சில் ஒலித்த உறுதி, எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

"நான் விடுதலையாவதைப்பற்றி உனக்கெப்படித் தெரியும்?" எனக்கிருந்த வியப்பை வினவாக உருமாற்றி வெளியிட்டேன்.

"எனக்குத் தெரியும். இங்கு வெகு காலமாகவே நான் இருந்து வருகிறேன். ஒரு காரணமுமின்றி உங்களைப் போன்றவர்களை அரசாங்கம் கைது செய்யும், பிறகு உங்களது காலில் விழுந்து மன்னிப்புக் கோரும்...உங்களைப் பொருத்தவரை, குறிப்பிட்ட காலமென்று ஒன்றில்லை. விரும்பும் போது வெளியே விடுவார்கள்." அவன் ஏதோ, சாதாரணமான விஷயத்தைக் குறித்துப்பேசுவதைப்போலக் கூறினான்.

"நாங்கள் கைதிகள்—விரைவில் உங்கள் கணவர் விடுதலையடைய வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறோம். எங்களது வேண்டுதல் பொய்க்காது!" உன்னிடம் அவன் கூறினான், உணர்ச்சியும், கனிவும், தவழும் குரலில்.

பிரார்த்தனைக்குள்ள சக்தி எவ்வளவு என்பதை நாம நன்றாக அறிந்திருக்கோம். ஆள்வோரின் சிறைக்கம்பிகளை ஒடித்தெறிய பிரார்த்தனையால் முடியாது. ஆனால் ஒரு கண் நேரம்.........நம் நெஞ்சில் சாந்தியை சிருஷ்டிக்க அதனால் முடியும், காரிருளில் ஏற்றி வைக்கப்பட்டு அடுத்த கணமே அணைந்து போகும் அகல் விளக்கைப் போல.

அந்தக் கைதியைப்பற்றி உன்னிடம் சொல்வதற்கு மறந்துவிட்டேன். மோல்ஹெ என்பது அவனது திருநாமம்.........இப்போது இரவு வளர்ந்து கொண்டிருக்கிறது, மணி பதினொன்று......நான் சிறையிலே தனித்திருக்கிறேன். ஒரே வெப்பம்! மோல்ஹெ நானிருக்கும் அறையின் வராந்தாவிலிருக்கிறான். திரியைத் தாழ்த்தி ஒளி குறைக்கப்பட்ட ஒரு விளக்கு அவனருகேயிருக்கிறது. சிறைப் பாதுகாப்பு தான் அவனது அலுவல். அவனை என்னறையினருகே காவலிருக்க அனுமதிக்கப்பட்ட போது, நான் அளவற்ற ஆனந்தமடைந்தேன். என் இதயத்தில் கவிந்திருந்த கவலை மேகங்களை கிழித்தெறியும் நிலவாக விளங்கினான், அவன். என் அறையின் வெளி வராந்தாவில் தான் அவன் இருப்பது. இரும்புக் கம்பிகளுக்குள்ளே நான் இருப்பேன்......நாங்களிருவரும் பேசிக்கொண்டே பொழுதை கடத்துவோம், என்றும்.

மோல்ஹெ கிராமவாசி...முதலாவது உலக மகாயுத்தத்தின் போது சேனையில் தன் பெயரைப் பொறித்துக்கொண்டான். இராக், ஈஜிப்ட், பிரான்ஸ் முதலிய நாடுகளை அவன் பார்த்திருக்கிறான். போர் முடிந்ததும், படைகலைக்கப்பட்டு எங்கெங்கோ, சிதறியவர்களுள் இவனும் ஒருவன். மோல்ஹெ பிறகு லக்னோ ரயில்வே அலுவலகத்தில், ஒரு வேலை கிடைத்தது. தனக்காக எங்கிருந்தோ, ஒரு மனைவியையும் தேடிக் கொண்டான்.

மணம் முடிந்து சில மாதங்கள் சென்று நடந்த ஒரு நிகழ்ச்சி...... அவனைச் சிறைச்சாலையில் தள்ளி விட்டு வேடிக்கை பார்க்கிறது! ஆயுள் தண்டனை அளித்த சந்தோஷத்தில் சட்டபுத்தகமும், மூடிக்கொண்டது. பத்து ஆண்டுகளாக உயிரை அரிக்கும் காராகிருகத்திலிருந்து வருகிறான். இனி நான்கு வருடங்கள் சென்றால்......அவன் சுதந்திரப் பறவையாய் விடுவான்!

ஒரு நாள் இரவில்......

"மோல்ஹெ! உண்மையை அப்படியே என்னிடம் சொல்லவேண்டும். ஆயுள் தண்டனை அனுபவிக்க நீ என்ன குற்றம் செய்தாய்?" நான் கேட்டேன், அவனிடம் ஆர்வத்தைஅடக்கமாட்டாமல்! ...பிறரது கதையைக் கேட்டால் பொழுதும் போகும்......சொல்பவனுக்கும் ஒரு ஆறுதல்.........! இது தானே, மனதின் விசித்திரமான பண்பு!

வழக்கம் போல அப்போதும் அவன் சிரித்தான். பிறகு ஒரு பெருமூச்சு...எங்கேயோ — பார்வையைப் பதித்துக் கொண்டு பேசினான்......

"என் மனைவியை அழைத்து வருவதற்காக அலுவலகத்தில் ஒரு வார விடுமுறை பெற்றுக்கொண்டு பாரபன்கி ஜில்லாவிற்குச் சென்றேன். என் அண்ணனின் குடும்பம் அங்குதானிருந்தது. நாங்கள் விவசாயிகள்...எங்களுக்குச்சொந்தமாக சிறு வயல் இருந்தது. அதிலிருந்து வந்த வரும்படி குடும்பம், நடத்துவதற்கே போதும், போதாமலுமிருந்தது. என் மனைவி அங்குதானிருந்து வந்தாள். லக்னோவில் ஒரு வீடு கிடைத்தபிறகு அவளை அழைத்துக் கொள்ளலாமென எண்ணியிருந்தேன். குறைந்த வாடகையில் வசதியான ஒரு வீடு கிடைத்ததினால் அவளை அழைத்து வரச் சென்றேன். புதிய வீட்டில் என்னோடு வசிக்கப் போவதையறிந்த அவளுக்குத்தான் எவ்வளவு ஆனந்தம்!......அன்று அவள் போட்ட திட்டங்களும், கட்டிய மனக் கோட்டையும்......வர்ணிக்க முடியாது...அவளுடைய பொருள்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து மூட்டை கட்டினாள்......பொருட்கள் என்றதும் அதிகமாக மதிப்பு போட்டு விடவேண்டாம். மண் பாத்திரங்கள்—கண்ணாடி—கொப்—மாவு—அரிசி இவைகள் தான்! இதைவிட என்னதான் கொண்டு போகமுடியும், ஒரு கிராமத்திலிருந்து? அங்கே கோழிகள் வளர்க்கப் பட்டுவந்தன. அவையில் ஒரு சேவலையும், பெட்டைக் கோழியையும் ஒன்றாகக் கூடையினுள்ளே வைத்து மூடினாள்."

இந்த இடத்தில் மோல்ஹெ கலகலவெனச் சிரித்தான்!......பத்து வருடங்கள் கழிந்தும் தன் மனைவியின் செயலைநினைத்துச்சிரிக்க முடிகிறதே, அவனால்......! அதுதானே விந்தை!

அவன் தொடர்ந்தான்......

"மறுநாள் காலையில் சிலர் எங்கள் வீட்டிற்கு ஓடோடியும் வந்தனர், 'உன் அண்ணனுக்கும், வேறொருவருக்கும் வயல்கரையில் வைத்து வழக்குண்டாயிற்று... வாய் வார்த்தை முற்றி, தடியை வைத்துத் தாக்கிக் கொன்றார்கள்...'—அவர்கள் சுமந்து வந்த செய்தியை வியர்க்க, வியர்க்கக் கூறிச் சென்றனர். நான் வயலை நோக்கி விரைந்தேன். நான் அங்கு

(5-ம் பக்கம் பார்க்க)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேறோர் முறை சரித்திரம் பேசிற்று. அந்தப் பேச்சின் முடிவாகத்தான் ஜார் ஆட்சி சாய்ந்து, சீமான்களின் சுகபோகம் அழிந்து, ஏழைகளின் கண்ணீர் துடைக்கப்பட்டு, மக்கள் ஆட்சி மலர்ந்தது. இதோ, தென்னாட்டில், நம்முடைய காலத்தில், நமக்கெல்லாம் மிக நன்றாகக் கேட்கும் விதத்தில், சரித்திரம் பேசுகிறது. இங்கிலாந்திலே சரித்திரம் பேசியதால் என்ன விளைவு ஏற்பட்டதோ, பிரான்சிலே சரித்திரம் பேசியதால் என்ன முடிவு ஏற்பட்டதோ, ரஷ்யாவிலே சரித்திரம் பேசியதால் என்ன விளைவு ஏற்பட்டதோ, அதே விளைவுதான் இங்கேயும் ஏற்படும், இங்கே சரித்திரம் பேசுவதாலும்! ஆம்! காங்கிரஸ் எதேச்சாதிகாரம் தொலையும். ஆதிக்கவாதிகளின் ஆணவம் அழியும். சர்வாதிகாரப் பித்தர்களின் அடக்குமுறை தர்பார் ஒழியும். மக்களை வாழவைக்கும் மகத்தான ஆட்சி மலரும். நம் நாட்டிலே இப்போது நடந்து முடிந்திருக்கிற பொதுத் தேர்தல் மூலம், சரித்திரம், நம் மக்களுக்கு மட்டுமல்ல, உலகத்திற்கே எடுத்துக் கூறியிருக்கிற முக்கியமான உண்மை இது.'

**அறிஞர் அண்ணா அவர்கள்,** அவருக்கென்றே அமைந்திருக்கிற அந்த அழகு தமிழாலே இந்த வீரமுழக்கத்தை எழுப்பிய போது, சென்னை செயின்ட் மேரி மண்டபமே அதிர்ந்தது— கூடியிருந்த மக்கட் கடலின் ஆனந்த ஆரவாரம் அவ்வளவு அதிகம் "அறிஞர் தலைவர் அண்ணாவே! எங்கள் இருதய கீதமே! நீங்கள் கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் உண்மை! உண்மை! முழு உண்மை!" என்று கூறுவது போல இருந்தது, மக்கள் மன்றம், பத்து நிமிஷ நேரத்திற்கு மேல் தொடர்ந்து கைதட்டிய அந்த அருமையான காட்சி.

வெள்ளம்போல் திரண்டு கூடியிருந்த மக்களின் இடியோசை போன்ற கைதட்டுதலுக்கிடையே, அண்ணா, தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

"இந்தப் பொதுத் தேர்தலிலே, காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்திருக்கிறதுஎன்பதுமட்டுமல்ல நம்முடைய மகிழ்ச்சிக்குக் காரணம். காங்கிரஸ் கட்சி, யாரால் தோற்கடிக்கப்படவேண்டுமோ அவர்களால் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவேதான் நம்முடைய இதயமெல்லாம் இன்பக் கடலிலே மூழ்கி எழுகிறது. "குமாரசாமி ராஜாவும் சங்கராச்சாரியும் போட்டியிட்டனர். குமாரசாமியார் தோற்றார். சங்கராச்சாரியார் வென்றார்" என்று தேர்தல் முடிவுகள் இருந்திருக்குமானால் நமக்கு மகிழ்ச்சியா பிறக்கும்? "பொன்னேரி தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகர் பக்தவச்சலத்தை சுயேச்சை அபேட்சகர் திருவாடுதுறை தம்பிரான் தோற்கடித்துவிட்டார்" என்று பத்திரிகைச் செய்தி வந்திருக்குமானால் நமக்கு ஆனந்தமா ஏற்படும்? வேதனையும் வெட்கமும் கவலையும் கண்ணீரும் அல்லவா நமக்கு ஏற்பட்டிருக்கும் அந்த நிலையில்! காங்கிரஸ்காரர்கள் தோற்று, காங்கிரசைவிடப்பிற்போக்கானவர்கள் வெற்றிபெற்றிருந்தால் நமக்கு மகிழ்ச்சி எப்படி ஏற்பட முடியும்? வெட்கமும் துக்கமும் தானே உண்டாக முடியும்? ஆனால் இப்போதோ, காங்கிரஸ் கட்சி தோற்கடிக்கப்பட்டிருக்கிறது அதுமட்டுமல்ல அது யாரால் தோற்கடிக்கப்பட வேண்டுமோ அவர்களால் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. முற்போக்கு உள்ளம் படைத்தவர்கள், அறிவு ஆற்றலில் சிறந்தவர்கள், உயர்ந்த இலட்சியம் கொண்டவர்கள், மக்களின் துயரத்தைத் துடைக்கவல்லவர்கள், இப்படிப்பட்டவர்களல்லவா இப்போது வெற்றி பெற்றிருக்கிறார்கள். நீங்களே சொல்லுங்கள்! இதைவிட நமக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடிய நிகழ்ச்சி வேறென்ன இருக்கமுடியும்?"

**அண்ணாதுரை அவர்கள்** இது போலக் கூறிமுடித்தவுடனே, நெடுங்கடல் பொங்கி எழுந்தது போல, மக்கட் கடல், கையொலி அலைகளை எழுப்பிற்று. அந்த ஒலி அலைகளின் மீது நீந்தி மிதந்தபடியே அண்ணாவின் சொற்கள் மீண்டும் பவனி வரலாயின. அண்ணா சொன்னார் :—

"இதோ இங்கே கம்பீரமாக வீற்றிருக்கிற எம்.எல்.ஏ.க்களையும் எம்.பி.க்களையும் பாருங்கள். இவர்கள் ஒவ்வொருவரும் திராவிட நாடு திராவிடருக்கே என்கிற நம்முடைய இருதய கீதத்தை மனமார ஒப்புக்கொண்டிருப்பவர்கள். அதற்கென்று நாம் தயாரித்துக்கொடுத்த உறுதிமொழித்தாளிலே மகிழ்ச்சியுடன் கையொப்பம் பொறித்தவர்கள், காங்கிரஸ் கட்சியின் பலம் பொருந்திய தாக்குதல்களையெல்லாம் தூள்தூளாக்கிவிட்டு வெற்றிக்கொடி உயர்த்திடவர்கள். இவர்களிலே சிலர் இன்னமும் கல்லூரி மெருகு கலையாத கட்டிளங் காளைகள். சிலர், அறிவும் ஆற்றலும் மிக்க வழக்கறிஞர்கள். சிலர், உலகமெனும் பல்கலைக் கழகத்திலே அனுபவம் எனும் பட்டம் பெற்றுத் தேறிய பொது அறிவுப்பேராசிரியர்கள். சிலர், தாலுகா போர்டு ஜில்லா போர்டு முதலிய நிர்வாகக் கழகங்களிலே இருந்து பணியாற்றி ஆட்சி அனுபவத்திலே பழுத்து முதிர்ந்திருப்பவர்கள். எல்லோருமே, பொதுமக்களின் வேதனைகளையும் வாட்டத்தையும் போக்

குவதற்காகத் துடிதுடித்துக் கொண்டிருப்பவர்கள். அந்தக் காரியத்தைச் செய்துமுடிப்பதற்குத் தேவையான தகுதியும் திறமையும் படைத்தவர்கள் நீங்கள்தான் பாருங்களேன்! காக்கி உடை ஒன்றுதான் இல்லையே தவிர, மற்றபடி இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இராணுவ வீரர் போல அல்லவா காட்சி தருகிறார்கள்! இப்படிப்பட்ட அறிவு ஆற்றல் மிக்கவர்களால் ஒரு நாட்டை நல்ல முறையில் ஆளமுடியாதென்றால் வேறு யாரால்தான் ஆளமுடியும்? இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?'

புன்முறுவல் பூத்த முகத்துடனே, அண்ணா, இந்தப் பொன்னான மொழிகளை வீசிய போது, எதிரே குழுமியிருந்த மக்கள் வெள்ளம் பூரிப்பு உணர்ச்சியால் பொங்கிற்று. ஆநந்த ஆர்வத்தால் அலைமோதிற்று. பொதுச் செயலாளரின் சொற்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கற்கண்டுக்கட்டியாக இனித்தது அம் மக்களுக்கு! அதிலென்ன ஆச்சரியம்? கற்கண்டுக் கட்டி இனிக்கத்தானே செய்யும்?

4—3—52 அன்று மாலை, மென்னை செயின்ட்மேரி மண்டபமு, திராவிட முன்னேற்றக் கசக வெற்றி மாளிகையாகப் புது உருவம் பெற்றுவிட்டது. திராவிடநாடு திராவிடருக்கே என்கிற உறுதிமொழித் தாளில் கையொப்பம் பொறித்து, தி. மு க. வின் ஆதரவைப் பெற்று, வெற்றிமாலை சூடியிருக்கிற சென்னை சட்டசபை, டில்லி பாராளுமன்றம், இவற்றின் உறுப்பினர்களைப் பாராட்டுவதற்காக, திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையத்தின் சார்பில், அங்கே ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாலை நான்கு மணி முதலே மக்கள், மண்டபத்தை முற்றுகையிடத் தொடங்கிவிட்டனர். திக்கெட்டிலிமிருந்து திரள் திரளாக வந்து குழுமிய மக்கட் பட்டாளம், செயின்ட் மேரி மண்டபம் முற்றிலும் நிரம்பி, அந்த மண்டபத்தின் அருகே இருக்கிற காலி இடங்களையெல்லாம் நிரம்பிவிட்டு, நாலாபுறமும் இருக்கிற வீதிகளிலெல்லாம் வழிந்தோடலாயிற்று. காணும் இடமெங்கும் மக்கள் முகம்! பார்க்கும் இடமெங்கும் ஆரவார அலை ஓசை!

ஆறு மணிக்குக் கூட்டம் தொடக்கமாயிற்று. அறிஞர் அண்ணா தலைமை வகித்தார்.

மேடையில், முன் வரிசையில், நடுவிடத்தில், தென்னாட்டின் நடுநாயகமாகிய அண்ணா, வெற்றிக் களை வீசும் முகத்துடன் கம்பீரமாக வீற்றிருந்தார். வெண்ணிலாவைச் சுற்றி விண்மீன்கள் வீற்றிருப்பதுபோல, அவருக்கு அருகிலேயும் பின் வரிசைகளிலேயும், தி. மு. க. ஆதரவுபெற்று வெற்றி பெற்ற எம். எல். ஏ.க்களும் எம்.பி.க்களும் வீற்றிருந்தனர். இயக்க முன்னணி வீரர்களான இரா. நெடுஞ்செழியன், மு.கருணாநிதி, ஏ வி. பி. ஆசைத்தம்பி, சி. பி. சிற்றரசு, என். வி. நடராசன், காஞ்சி மனோகரன, தோழியர் சத்தியவாணிமுத்து, க. அன்பழகன், கே. ஏ. மதியழகன், இராம. அரங்கண்ணல், தில்லை வில்லாளன், காஞ்சி சி. வி. எம். அண்ணாமலை, குடந்தை நீலமேகம், திருச்சி பாரங்குசம்,— தர்மலிங்கம், ஜலகண்டபுரம் கண்ணன், சென்னை கே கோவிந்தசாமி, போளூர் சுப்ரமண்யம், தஞ்சை ஏ. கே. வேலன் மற்றும் பலர் மேடை மீது அமர்ந்திருந்தனர்.

முதலில் தோழர் மதியழகன், தி. மு. க. ஆதரவுடன் வெற்றி பெற்ற வீரர்களின் பட்டியலை வாசித்தார்.

பிறகு அண்ணா அவர்கள் விழாவுக்குத் தலைமைவகித்து, வெற்றி வீரர்கள் ஒவ்வொருவருடைய பெயரையும் கூறி அழைத்து, அவர்களைப் பாராட்டி மலர்மாலை சூட்டலானார்.

வெற்றி வீரர்கள் ஒவ்வொருவரையும் கண்டபோது, மக்கள், மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு கடல் அலையெனக் கையொலி எழுப்பி, தங்கள் ஆநந்தத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

வெற்றி வீரர்களைப் பாராட்டியும், பொதுத் தேர்தலின் பல்வேறு விளைவுகளை விளக்கியும், காங்கிரஸ் கட்சி பொதுமக்களுக்கு இழைத்துள்ள அநீதிகளை எடுத்துக்காட்டியும், வெற்றி பெற்றுள்ள எம்:எல்.ஏ.க்களின் 'கடமைகளை விளக்கியும், அண்ணா அவர்கள், சுமார் ஒரு மணி நேரம், விரிவுரை ஆற்றிய பிறகு, வெற்றி பெற்ற எம். எல், ஏ.க்கள் ஒவ்வொருவரையும் அழைத்து, தத்தம் கருத்துக்களைத் தெரிவிக்கும்படி கூறினார்.

பொதுமக்களின் பலத்த கை தட்டுதலுக்கிடையே சொற்பொழிவாற்றத் தொடங்கிய ஒவ்வொரு எம்.எல்.ஏ.வும், தங்கள் வெற்றிக்காக ஓயாது பாடுபட்ட தி.மு.க. தோழர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர். சட்ட சபையில் திராவிட நாடு பிரிவினைக்காக ஓயாது பாடுபடுவோம் என்கிற உறுதியுரையைத் தந்தனர். காங்கிரஸ் கட்சியின் கொடுமைகளை முறியடிக்கும் நற்பணியிலிருந்து ஒருநாளும் பிறழமாட்டோம் என்று வீரமுழக்கமிட்டனர். மக்களின் குறைகளைப் போக்க இயன்ற வழியெல்லாம் பாடுபடுவோம் என்று உறுதி கொடுத்தனர்.

இரண்டு மணிநேர அளவுக்கு மேல், எம்.எல்.ஏ.க்களின் சொற்

(16-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்லும் முன்பே அடிதடி முடிந்திருந்தது. பேச்சு மூச்சற்றுக் கீழே கிடந்தார், என் அண்ணன். பலமான காயங்களைப் பெற்றிருந்ததினால் அடிக்கடி 'ஐயோ! அம்மா!' என முனுமுனுத்துக் கொண்டிருந்தார். அவரிடம் நான் கேட்டேன், என்ன நடந்ததென்று. வயலின் எல்லை பற்றி வாக்கு வாதம் எழுந்ததினால் நான்கைந்து முரடர்கள் அவரைத் தாக்கினார்களென்றும், எதிரிகளுள் ஒருவன் அண்ணனால், அடிபட்டுக்கீழே சாய்ந்ததும், மற்றவர்கள் ஓடிமறைந்தார்களென்றும் அண்ணன் என்னிடம் கூறினார். நாங்களிருவரும் வீட்டையடைந்தோம். அவரது தலையில் ஆழமான ஒரு காயமிருந்தது. ரத்தம் பெருக்கெடுக்காதபடி, காயத்தைத் துடைத்து, துணி வைத்துக் கட்டினேன்.

"தம்பி! ஆபத்தொன்றுமில்லையே." என்று என் தமையனின் மனைவி கண்ணீர் வழிய, சோகம் பொங்கக் கேட்டாள். அவளது அழுதமுகம் இன்றும் என் நினைவிலிருக்கிறது.

என் மனைவி வீட்டின் ஒரு மூலையில் நின்றிருந்தாள். அவள் முக்காடிட்டிருந்தாலும், அழுதுகொண்டிருந்தாள் என்பது நன்றாகத் தெரிந்தது. எப்படியோ சோகமயமான அந்த இரவு கரைந்து மறைந்தது.

காலையில் சப் இன்ஸ்பெக்டரும் போலீசாரும் கிராமத்திற்கு வந்து என்னையும், என் தமையனையும், கைதாக்கி இழுத்துச் சென்றனர்.

பிரயாணத்திற்காக நாங்கள் கட்டிவைத்திருந்த மூட்டை கேட்பாரற்று வாசலில் கிடந்தது. கண்ணீரால் தன் விழிகளைக் குளமாக்கிக் கொண்டிருந்தாள், எனக்குக் கிடைத்த 'அந்த மனைவி'!

மோல்ஹெ மீண்டும் மௌனம் பூண்டான். இனியும் தன் கதையைத் தொடர்ந்து கூற வேண்டாமென்று அவன் எண்ணினானோ, என்னவோ?

"பிறகு என்ன நடந்தது?" நான் அமைதியைக் கிழித்தேன், பேச்சால்.

'பிறகென்ன! ஆயிரம் ரூபாய் கொடுத்தால் நாங்கள் விடுதலையடையலாமென்று இன்ஸ்பெக்டர் கூறினார். ஆயிரம் ரூபாய்...! அதை ஒன்றாக இதுவரை என் ஆயுளில் நான் பார்த்ததேயில்லை!"

"அண்ணனால் அடிபட்டு சாய்ந்தவன் மாண்டான். எங்களைக் கவ்வியிருந்த கிட்டி இன்னும் இறுகிவிட்டது. கொலைக்குற்றத்திற்காக இருவரையும் தூக்கிலிடுவார்கள் என இன்ஸ்பெக்டர் எங்களிடம் தெரிவித்தார். இரு உயிர்கள்!... அவைகளின் விலை... ஆயிரம் ரூபாய்...! அதிகமில்லைதான்!...நாங்கள் ஏழைகள்!...எதுவுமே எங்களால் செய்ய முடியவில்லை. எங்களுக்கெதிரான சாட்சிகள் பேசப்பட்டன...நீதிமன்றம் எங்களுக்கு மரண தண்டனையளித்தது."

"அதன் பிறகு வழக்கு தலைமை நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. அங்கே மரண தண்டனை ஆயுள் தண்டனையாக மாறியது. நாங்கள் நிரபராதிகள்; ஆனால் நீதி எங்கள் விஷயத்தில் ஊமையாய் விட்டது."—மோல்ஹெ மௌனமானான்.

அன்பே! நீ சிந்தித்துப்பார். குற்றமற்றவனுக்கு இந்தக் கொடுமையான தண்டனை! வாழ்வில் வசந்தம் வீசிடவேண்டிய......பதினான்கு வருடங்கள்...நான்கு பக்கங்களிலும், சுவர்களால் வேலியிடப்பட்ட இடத்தில் வேலைசெய்வதையே கடமையாகக் கொண்டு, வேதனையையே தோழமையாகக் கொண்டு வாழும்...இந்த வரண்ட வாழ்க்கை!...அப்பப்பா! எத்தனை பயங்கரமானது! நெருப்புநிகழ்ச்சிகளால் விரட்டப்பட்டு, அலைந்து போன அவன் உள்ளம்...! எவ்வளவு உறுதியானது! வாழ்வின் கொடுமைகளையெல்லாம், வரவேற்று, வழியனுப்பி வைத்த அவனால் முகத்தில் எப்போதும், இளஞ் சிரிப்பை இழுத்து வைத்துக்கொள்ள எப்படிதான் முடிகிறதோ! எல்லோரிடமும் அன்பு காட்டுவது—எப்போதும் நகைமுகம்—சாந்தமான பேச்சு—நிறைவான தோழமை—இதுதான் மோல்ஹெ—உண்மையிலேயே அவன் ஒரு அபூர்வப் பிறவி!

ஆனால், எப்போதும் சிரிப்பைச் சிந்தும் அவனது வதனம் இன்று ஏனோ ஒளியிழந்து காணப்படுகிறது. அவன் சிரிக்கவில்லை-பேசவுமில்லை! நிசப்தமாக அமர்ந்திருந்தான், அணைந்துபோன விளக்கைப் போல. அமைதியாக இருந்தாலும், அப்போது அவனது நெஞ்சில் எப்பேற்பட்ட நெருப்புமலை சிதறிக் கொண்டிருந்ததென்பதைப் பிறகுதான் அறிந்தேன்.

"மோல்ஹெ! என்ன நடந்தது? வாட்டத்தோடு இருக்கிறாயே! ஏன்? இன்று நீங்கள் சந்திக்கும் தினமல்லவா? உங்கள் மனைவி கிராமத்திலிருந்து வரவில்லையா, என்ன?"—என் உள்ளத்திலே கூத்தாடிய கேள்விகளை வெளியே கொட்டினேன். என் பேச்சைக் கேட்டதும், எழுந்து சிறைக் கம்பிகளினருகே வந்து நின்றான்.

"இரண்டு வருடங்களுக்குப் பிறகு இன்றுதான் என் மனைவி என்னைப் பார்க்க வந்தாள். இந்த நீண்ட காலத்தினிடையே என்னை வந்து சந்திக்க முடியாமைக்கு, வருத்தி மன்னிப்புக் கோரி, அவளிடமிருந்து இரண்டு கடிதங்கள்தான் வந்தன."

"பிரயாணச்செலவிற்கான பணம் அவளிடம் இல்லையாம். வேறு வீடுகளில்வேலைசெய்து, எங்களுக்குச் சொந்தமான இரண்டு எருமைகளினின்று கிடைத்த பாலை விற்றும், எப்படியோ வாழ்ந்தாளாம்! கடைசியில் எருமைகளையும் விற்றுவிட்டாளாம்! இந்தச் செய்திகளே கடிதங்களில் காணப்பட்டன."

"இரண்டு வருடங்களுக்குப்பிறகு இன்று வந்தாள், என்னைக்காண. ஆனால்...அவளுடைய கரங்களிலே ஒரு தவழும் குழந்தை! அது என்னைக் கண்டதும் அழ ஆரம்பித்தது! குழந்தை ஏதென்று கேட்டேன், அவளிடம்."

"வறுமையின் கொடுமையை அவளால் சகிக்கமுடியவில்லையாம். மீண்டும் விவாகம் செய்துகொள்ள வேண்டிய கட்டாயத்திற்குள்ளாய் விட்டாளாம்! இதை அவள் நடுங்கிக் கொண்டே என்னிடம் கூறினாள்."

"எனக்கு எப்படியிருக்கும்? இயற்கையின் தூண்டுதலை அடக்கியப்படுத்த எந்த உயிராலும் முடியாதுதான்! ஆனால் அந்த 'திடீர் இடி' என் நெஞ்சைக் கருகடித்து விட்டது."

"அப்படியானால் எதற்காக நீ இங்கு வந்தாய்? பாதுகாப்பிற்காக நீ தேர்ந்தெடுத்த அவனோடு ஆனந்தமாக இருப்பதுதானே! இனி உனக்கும், எனக்கும் எந்த விதமான தொடர்புமில்லை. போ! போய்விடு!', —ஆத்திரத் தேளினால் கொட்டப்பட்டு நிலையறியாது கண்டபடி கூவினேன்......அவள் ஒன்றுமே பேசவில்லை. தலைகுனிந்தபடி விம்மி, விம்மி அழுதாள். எனக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை. சுற்றி

(11-ம் பக்கம் பார்க்க)

# திருவள்ளுவரும் தோற்றார்!

[ பூ. கணேசன் B. A. (Hons) ]

திருவள்ளுவரா? தோற்றாரா? எந்தத் திருவள்ளுவர்? என்றெல்லாம் அடுக்கடுக்காகக் கேள்விகளை எழுப்பிக் கொண்டே செல்லத் தோன்றுகிறதல்லவா உங்கட்கு!

“பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்” என்று மொழிந்து மங்காப் புகழ்கொண்ட வள்ளுவரா தோற்றார்?

‘இரந்தும் உயிர்வாழவேண்டின் பரந்து கெடுக இவ்வுலகியற்றியான்” என்று எடுத்துரைத்து இறவாப்புகழ் பெற்று மிளிரும் வள்ளுவரா தோற்றார்?

“அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை” என்று வரையறுத்து வன்புகழ் கொண்ட வள்ளுவரா தோறறார்?

“சிறை காக்கும் காப் பெவன் செய்யும் மகளிர் நிறை காக்கும் காப்பே தலை” என்று இடித்துக் கூறி எதமில் புகழ் பெற்ற வள்ளுவரா தோற்றார்?

“ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்” என்று விழுப்பம் தந்துரைத்தவள்ளுவரா தோறறார்?

“எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு” என்று நெறிவகுத்தவள்ளுவரா தோற்றார்?

என ஆதாரப் பூர்வமாக அடித்துப்பேசத் தோன்றுகிறதல்லவா உங்கட்கு!

‘வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகு' எனக்கூறி எள்ளி நகையாடியவள்ளுவரா தோற்பார்?

‘எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'

எனப் பகுத்தறிவு போதித்த வள்ளுவரா தோற்பார்?

‘நெஞ்சில் துறவாது துறந்தார் போல் வஞ்சித்து வாழ்வாரின் வன்கணார் இல்' எனக்கடிந்து கூறிய வள்ளுவரா தோற்பார்?

‘மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம் பழித்த தொழித்துவிடின்' என்று, நல்லறங் காட்டிய வள்ளுவரா தோற்பார்?

என்று மார்புதட்டி முழங்கத் தோன்றுகிறதல்லவா உங்கட்கு!

“ஊழையும உப்பகம் காண்பர் உழைவின்று தாழாதுஞற்றுபவர்” என்றும், “மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னயர் உயிர் நீப்பர் மானம்வரின்” என்றும் ‘ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம் இழிந்த பிறப்பாய்விடும்' என்றும, ‘மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' என்றும் பொன்மொழி பொழிந்த வள்ளுவர் தோற்றவராவாரா என்று சீற்றங்கொள்கிறீர்களல்லவா?

முதற் பாவலர்-செந்நாப் போதார்—பொய்யில்புலவர் தோற்றதேன்?

## அரும்பெருங் கோட்பாட்டு அறிவுப்புலவர்!

தமிழ் என்றால் திருக்குறள்; புலவரென்றால் வள்ளுவர் என்ற அளவுக்குப் புகழும் பெருமையும் பெற்று—கற்றுணர்ந்தார் கைப்பிடியினரேயுள்ள இந்நாட்டவராலேயன்றி மற்ற எந்நாட்டாராலும்—பாராட்டெடுக்கப் பெற்று போற்றப்பட்டு உயர்ந்தவர் திருவள்ளுவர். பொய்யில் புலவர்—செந்நாப் போதார்—‘தெய்வ'ப்புலவர் என பலப்பலபட்டம் சூட்டப் பட்டு உலகில் உயர்ந்தவர் திருவள்ளுவர். மானிட வாழ்க்கைத் துறை ஒவ்வொன்றையும் கூறு கூறாக, வேறு வேறாக நன்கு உய்த்துணர்ந்து, பகுத்தறிந்து அவற்றுக்கெல்லாம் இலக்கணமும், அதன் வழி இலக்கியமும் சமைத்தவர். நவீன உலகில் நாம் என்னென்ன நூல்கள் பற்றிக் கேள்வியுறுகிறோம்—நில நூலென்ன, உயிர் நூலென்ன, வான நூலென்ன, விலங்கு நூலென்ன, மர நூலென்ன உடற்கூற்று நூலென்ன, விவசாய நூலென்ன, அரசியல்—பொருளியல்—குடியியல் நூல்களென்ன, இன்னும் என்னென்னதான்—அவையனைத்தையும் அன்றே கற்றறிந்து, அவற்றில் தோய்ந்து, உலகியல் பொது நூல் குறளைத் தந்துதவியர் திருவள்ளுவர். அவர் உழவரா, நெசவாளரா; மருத்துவரா, அமைச்சரா, அரசரா, சேனைத்தலைவரா, பொருளாதாரவல்லுநரா, பொறியியல் துறையினரா? எத்துறை மேற்கொண்டொழுகினார் வள்ளுவர்? எல்லாமும் தாமேயாய், அனைத்தனுபவமும் பெற்று, எடுத்துக்காட்டு லட்சிய ஆடவராகத் திகழ்ந்தவர் திருவள்ளுவர். அவர் இல்லற வாழ்வு நடத்தியவரா, அன்றி, துறவறம் மேற்கொண்டவரா? உலகியலில் ஈடுபட்டவரா, அன்றி முற்றுந் துறந்த முனிபுங்கவரா? பதினாறும் பெற்று, குடும்பசாகரமெனும் ‘கஷ்டத்தில்' மிதந்தவரா, அன்றி காண்பதும் கேட்பதும் உணர்வதும் பொய் யென்று கூறி இகத்தை வெறுத்துப் பரத்தை நோக்கி பஜித்து வந்தவரா? ஆஸ்திகரா. அன்றி, நாஸ்திகரா? இறையனைத்தையும் புரிந்தவராய், தக்கதை தக்கமுறையில் எடுத்துக் கூறுபவராய், ‘வியாபக' உண்மைபதிவைப்பெற்று நின்றவர் திருவள்ளுவர்.

அவர் சைவர்—இல்லை, வைணவர்—அன்று, கிறிஸ்தவர்—வேறு, பௌத்தர்—பொய், சமணர்—அல்லவே அல்ல, மகமதியர்—என்பதாக எல்லாச்சமயத்தாரும் இட்டுக்கட்டிக்கூறி, ஏதேதோ மேற்கோள்காட்டி, தங்கள் பக்கம் இழுத்துக்கொள்ளக்கூடிய இயல்பு நிறை புனிதமான, பொதுப்புடைக் கோட்பாடுகளைத் தன் மாட்டு அடக்கி வைத்திருந்த அறிவுச் சுடரைப்பாய்ச்சியவர் திருவள்ளுவர்.

வள்ளுவர் வீரரா?-கோழையா? கண்டிதமானவரா?—விட்டுக்கொடுக்கும் மனோபாவத்தினரா? இரக்கமற்ற கல்நெஞ்சரா? அஹிம்சாவீரரா? அன்பே உருவாய் அறிவே உயிர்ப்பாய்க் கொண்டே மிளிர்ந்த அரும் பெருங் கோட்பாட்டு அறநெறிப்புலவர் திருவள்ளுவர். அப்படிப்பட்ட வள்ளுவர் தோற்றதேன்?

(10-ம் பக்கம் பார்க்க)

# போர்வாள்

திராவிடர் வாரஇதழ்

சென்னை 8—3—52 சனிக்கிழமை


# நாகராஜர் நற்பாதை

"நாடு சுதந்திரமடைந்தபின் சென்னை மாகாண சட்டசபைக்கு நடக்கும் முதல் தேர்தல் இதுதான். காங்கிரஸ் மகாசபையின் மகத்தான தியாகங்களினால் நாடு சுதந்திரமடைந்த ஆனந்தத்தில் மக்கள் காங்கிரஸுக்கே பெரும் வெற்றி அளித்திருக்கவேண்டிய தருணம் இது. ஆனால் அப்படி நடக்கவில்லை. காங்கிரஸ் பெரும்பான்மையான ஸ்தானங்களைக் கைப்பற்றாதது மட்டுமல்ல, கிடைத்த ஸ்தானங்களில் கூட ஓட்டுகள் சிதறிய காரணத்தால் மிகக்குறைவான ஓட்டுகளாலேயே வெற்றி பெற்றனர். சென்னை மாகாண வாக்காளரில் மொத்தமாக வாக்களித்தவர்கள் கணக்கையும் அதில் காங்கிரஸுக்கு வாக்களித்தவர்கள் கணக்கையும் பார்த்தால், காங்கிரஸுக்குக் கிடைத்த வாக்குகள் மிகக் குறைவான சதவிகிதந்தான் ஆகிறது. எனவே நாம் ஒரு வகையான முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது. காரணம் எதுவாயினும் சரி; சென்னை ராஜ்ய மக்கள் இங்குள்ள காங்கிரஸ் தலைமையின் சேவையைப் பாராட்டவில்லை, ஸ்தாபனத்தையும் மதிக்கவில்லை.

"தங்கள் சுதந்திரப் போராட்டத்தில் செய்த தியாகங்களுக்காக மக்கள் அளித்த விராமான்யமாகவே தியாகிகள் நிலங்களை ஏற்றுக் கொண்டனர். ஆனால் இப்போதோ அது தவறு, மக்கள் அதை விரும்பியளிக்கவில்லை. நம் கட்சி சர்க்கார் பலம் கொண்டு நாமே எடுத்துக் கொண்டு விட்டோம் என்பது போன்ற மனசாட்சியின் உறுத்தலுக்கு இடமேற்பட்டுவிட்டது. அவ்விதம் நம்மை மதிக்காத பொது மக்களின் பொது சொத்தை நாம் விராமான்யமாகப் பெற்றிருப்பது. நம்முடைய தியாக பரம்பரைக்கு அவமானம் என்றே தோன்றுகிறது.

"இது மட்டுமல்ல, நாம் விராமான்யம் பெற்றது காரணமாக நாம் மேலும் தேசத்துக்குத்தொண்டு செய்யக்கூடிய சக்தியையும் செல்வாக்கையும் இழந்துவிட்டோம். முன்பெல்லாம் நம் பேச்சுக்களை ஆர்வமுடன் கேட்டு, அதன்படி நடந்து வந்த மக்கள், இந்தத் தேர்தலின் போது நம்சொற்களை அலட்சியம் செய்ததை நேரில் கண்டோம். "வாங்கிக்கொண்ட மான்யம் ஜெரிக்க வேண்டுமல்லவா, அதற்காக இந்த ஐந்து ஏகர் கத்துகிறது" என்று பரிகசித்தனர்.

மான்யம் பெற்றவர்களை கைக்கூலிக்காரர்கள் என்று பரிகசிக்கத் தயங்கவில்லை. மக்கள் அவ்விதம் செய்வது தவறு என்று புறக்கணிப்பதில் அர்த்தமில்லை. ஜனநாயக ரீதியில் அவ்விதம் தவறுகள் புரியவும் அவதூறு சொல்லவும்கூட அபிப்பிராய சுதந்திரம் வழங்கப்பட நாமே கருவிகளாயிருந்திருக்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது.

"இந்த நிலைமையில் எனக்கு ஒரே வழி தோன்றுகிறது. அரசியல் தியாகிகள் அனைவரும் நாம் பெற்ற மான்யங்களை சர்க்காரிடமே திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். இது அவ்வளவு சுலபமானதல்ல என்பது எனக்குத் தெரியும். பல தியாகிகள் மானியங்களைப் பெருந்தொகை செலவுசெய்து மராமத்து செய்திருக்கின்றனர். நமக்கு இதனால் பெரும் நஷ்டம் உண்டாகும் என்பதில் ஐயமில்லை. ஆனால் நாட்டின் நலனுக்காக எவ்வளவோ நஷ்டமடைந்துள்ள தியாக பரம்பரையைச் சேர்ந்த நம், நம்முடைய அவமதிப்பைப் போக்கிக் கொள்ளவும், நம்முடைய ஸ்தாபனத்தின் கௌரவத்தைக் காப்பாற்றவும் மற்றுமொரு முறை தியாகம் செய்யத் தயங்கக்கூடாது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

"தியாகிகள் இதைத் தனிப்பட்ட முறையில் செய்வதில் அர்த்தமில்லை. இச் செய்கையில் ஓரிரண்டு தியாகிகள் கௌரவம் அடைவதில் லாபமில்லை. எல்லோரும் கட்டுப்பாடாகவே இந்தத் தியாகத்தைச் செய்து, நம் ஸ்தாபனத்திற்குக் கௌரவத்தை யுண்டாக்கி பலப்படுத்தவேண்டும்.

"எனவே, மாகாணக் கமிட்டியார் இதைக் குறித்து மற்ற தியாகிகளையும் ஆலோசனை செய்து நிலங்களை விட்டுவிடும்படி அனைவருக்கும் உத்தரவனுப்ப வேண்டும் என்றும், அவ்விதம் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்."

தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள அரூர் அகரம் என்கிற ஊரைச் சேர்ந்த தோழர் ஏ. என். நாகராஜன் என்பவர், ஐந்து ஏகர் நிலம் பெற்றிருக்கிற காங்கிரஸ் "தியாகி"களிலே ஒருவர்.

அந்த அரசியல் "தியாகி"க்குத் தான் திடீரென்று, இத்தனை நாட்கள் பொறுத்து, தானும் தன்னைப் போன்ற ஏனைய "தியாகி"களும் ஐந்து ஏக்கர் நிலம் பெற்றிருப்பது நியாயமல்ல—முறையல்ல—அது பொது மக்களால் விரும்பப்படவில்லை—அப்படிப் பெற்றிருப்பது தங்களுடைய தியாக பரம்பரைக்கே அவமானம் என்கிற ஞானோதயம் ஏற்பட்டிருக்கிறது. ஏற்பட்டவுடனே இந்த நீண்ட கடிதத்தைத் தீட்டியிருக்கிறார் சுதேசமித்திரன் இதழில்—21-2-52 ஆம் நாள் ஏட்டில்!

"நான் உனக்கு அரிசி தருகிறேன்! நீ எனக்கு அதற்குப் பதிலாக அதன் விலைக்கு ஏற்ற அளவு மிளகாய் கொடு" என்று ஒருவன் இன்னொருவனைப் பார்த்து கேட்டு

ருன் என்றால், அவன், அரிசியைத் தியாகம் செய்கிறான் என்றல்ல பொருள். பண்டமாற்று வியாபாரம் செய்கிறான் என்று அர்த்தம்.

அதைப் போலவேதான், 'நான் சிறை வாழ்வை அனுபவித்திருக்கிறேன். தடியடியைப் பெற்றிருக்கிறேன். கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கிறேன். ஆகவே எனக்கு ஐந்து ஏகர் நிலம் கொடு'' என்று காங்கிரஸ்காரர்களிலே பலர் கேட்பது, தியாகம் ஆகாது. அரசியல் வியாபாரமே ஆகும்.

ஒன்றைக் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக இன்னொன்றைக் கேட்பதற்கு எப்போதுமே வியாபாரம் என்றுதான் பெயர்; அந்தச் செயலை யார் செய்தாலும் அதற்கு வியாபாரம் என்றுதான் பெயர்.

இந்த உண்மையை எந்தச் சிறு பிள்ளையும் அறியும். ஆனால் "தியாகி" நாகராஜருக்கோ இந்த உண்மையை உணர்த்த ஒரு பொதுத் தேர்தல் தேவைப்பட்டிருக்கிறது. எவ்வளவு பரிதாபமான நிலை தியாகி நாகராஜருடையது.

"தியாகி" நாகராஜர் நிலை பரிதாபமானதுதான். ஆனால் அதைவிடப் பரிதாபமானது ஏனைய "தியாகிகள்" நிலை! நாகராஜராவது இப்போதாவது உண்மையை உணர்ந்து கொண்டிருக்கிறார்! ஆனால் ஏனைய "தியாகி"களோ இன்னமும் உண்மையை உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை! அவர்கள், பாபம், தங்களை இன்னமும் "தியாகிகள்" என்றே நம்பிக் கொண்டிருக்கிறார்கள்! பரிதாபம்! பரிதாபம்!!

இந்தத் "தியாகிகள்" உண்மையிலேயே தியாகிகளாக இருந்தால், இவர்கள் தங்களுடைய தியாக சிந்தையை நிரூபித்துக் காட்டுவதற்கான ஓர் அருமையான பாதையை இதோ நாகராஜர் நன்கெடுத்துக் காட்டியிருக்கிறார். இவர்கள் ஒவ்வொருவரும் சர்க்காரிடமிருந்து பெற்றிருக்கிற ஐந்து ஏகர் நிலத்தை சர்க்காரிடமே திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்பதுதான் நாகராஜர் காட்டியிருக்கிற நற்பாதை.

இவர்களுடைய சொந்த நிலத்தை, ஏழை மக்களுக்கு வழங்குவதற்கென்று, இவர்கள் சர்க்காரிடம் தந்துவிட வேண்டும் என்று கூறவில்லை நாகராஜர்! சர்க்காரிடமிருந்து மான்யமாகப் பெற்ற நிலத்தை சர்க்காருக்கே திருப்பித் தந்துவிட வேண்டும் என்றுமட்டும்தான் கூறுகிறார்.

இது அற்ப காரியம்தான்! ஆனால் இந்த அற்ப காரியத்தைச் செய்தால்கூட போதும், இவர்களை, உண்மைத் தியாகிகள் என்று ஒப்புக்கொள்ள நாம் தயாராக இருக்கிறோம். நாடும் தயாராக இருக்கிறது.

ஆனால் செய்வார்களா இந்த காரியத்தை? நடப்பார்களா இவர்கள் நாகராஜரின் நற்பாதையில்? உண்டா இவர்களுக்கு இவ்வளவு நல்ல பண்பு?

மக்கள் மன்றம் கேட்கிறது இக் கேள்விகளை! என்ன விடை தரப் போகிறார்கள் காங்கிரஸ் தியாகிகள்?

# உடுமலை கனகராசன் மறைவு

சென்ற 15—2—52 ல் உடுமலைப்பேட்டையில் ஒரு பெருங் குடும்பத்தைச் சேர்ந்தவரும், முந்நாள் நகராண்மைத் தலைவரும், திராவிட முன்னேற்றக் கழக முக்கியஸ்தருள் ஒருவரும், இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழக மாநாட்டுத் திறப்பாளருமான M. S. கனகராஜன் அவர்கள் திடீரென மரணமடைந்தது உடுமலை மக்களையும் சிறப்பாக தி. மு. கழகத்தார்களையும் பெரும் துயரத்தில் ஆழ்த்திவிட்டது. அவரது சவத்தை மயானத்திற்குக் கொண்டுபோன பொழுது ஜாதி, மத, கட்சி பாகுபாடு இன்றி, ஆயிரக்கணக்கில் மக்கள் திராவிட முன்னேற்றக் கொடியும், கம்யூனிஸ்ட்டு கட்சிக் கொடியும், சோஷலிஸ்டுக் கொடியும், காங்கிரஸ் மகாசபைக் கொடியும் ஏந்தி, சவத்திற்கு முன்பு ஊர்வலமாக மயானம்வரை மௌனமாகச் சென்று, அன்னாரை அடக்கம் செய்த பின்பு உடுமலை நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. U. K. பழனிச்சாமிக் கவுண்டர் அவர்கள் தலைமையின்கீழ் மயானத்தில் அனுதாபப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தலைவர் திரு. U. K. பழனிச்சாமிக்கவுண்டர் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக திரு. B. நாராயண சிங் அவர்களும், உடுமலை முனிசிபல் கவுன்சிலர் திரு. சிக்கந்தர்பாஷா அவர்களும், கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு. சோமு அவர்களும், பொள்ளாச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக திரு. கிருஷ்ணசாமி அவர்களும், உடுமலை திருவள்ளுவர் மன்றத்தின் சார்பாக திரு. குருசாமி அவர்களும், கணியூர் திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பாக திரு. முருகேசன் அவர்களும், சோஷலிஸ்ட் கட்சியின் சார்பாக திரு. சின்னையா அவர்களும், உடுமலை காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. S. மருதமுத்து பிள்ளை அவர்களும், அவரது குண நலங்களைப் பற்றியும் அவரது சேவையைப்பற்றியும் பாராட்டிப் பேசினர். உடுமலையில் தண்ணீர்ப் பஞ்சத்தை நீக்க அரும்பாடுபட்ட அன்னாரது பிரிவுக்காக வருந்தி நகர மக்களின் சார்பாக அன்னார் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

## சென்னை தி. மு. க. கிளை 11-வது வட்டம்.

புத்தாண்டுக்கு உறுப்பினர் சேர்த்தல், பொதுக் கூட்டம் நடத்துதல், இவைகளைப் பற்றி முடிவு செய்யவேண்டியிருப்பதால் 8-3-52 சனி மாலை 6 மணிக்கு 181 என், பிராட்வே போர்வாள் நிலயத்தில் செயற்குழு உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இரா. சண்முகம்,
செயலாளர்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

## அந்தமில் இன்பம் நல்கும் அறிவுக் கருவூலம்

உலக ஆதி மக்கள் கூட்டத்தின் உதிரத்தெழுந்த, உயிர்ப்பின் வழி வந்த, இயற்கை மொழியாலான, இணையில் பெருநூல் திருக்குறள். உலகின் ஏனைய பகுதிகளில் நாகரிகமென்பது ஒன்று உருப்பெற்று நிலை பெறுதற்கு முன்னர், தக்க அடிப்படையில் திரண்டெழுந்த தென்றமிழ் நாகரிகத்தைச் சிறப்பிக்கும் தெள்ளிய நூல் திருக்குறள். பண்டைத் தமிழ் மக்களின் பண்பாடு, கலை, நாகரிகம் இன்னபிறவற்றின் கண்ணாடியாகத் திகழ்வது திருக்குறள். ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரான இந்நாட்டுப் பழங்குடி மக்களின் மூதாதையர்க்கு அருந்துணையாக அமைந்த நூல் திருக்குறள். அழகிய, இனிய, எளிய தீந்தமிழில் கற்றுணர்ந்த வல்லாரேயன்றி அல்லாரும் கேட்டின்புற்று செம்மை வாழ்வு மேற்கொள்ளவைக்கும் நடையில் 'இதன்பால இல்லாத தொன்றில்லை' என்ற வகையில் அனைத்தும், தன்னுள் அடக்கப்பெற்று 'ஒன்றேமுக்கால்' அடிகளால் உன்னத பாக்களைப் பெற்றுச் சிறக்க நிற்பது திருக்குறள்,

இல்வாழ்வாரின் வாழ்க்கை வழிகாட்டி, துறந்தாரெனப்படுவோரின் அறிவுக்கோயில், காதலர்களின் இன்பச்சுனை, அரசர்—அமைச்சர்—வீரரின் கருத்துக் கல்லூரி, தொழில்துறை போகியோரின் தோமில பெட்டகம், உலக மனிதனின் கேடயம் திருக்குறள், நடுநிலைப்புலவர் நக்கீரர், அணி தமிழுக்கு மேகலை சூட்டிய சாத்தனார், தமிழ்த்தாய்க்கு சிலம்பணிவித்த, உரிமையரசு துறந்த, அந்தமில் இன்பத்து அரசாள் வேந்து இளங்கோ, செஞ்சொற் கவியின்பம் சிந்தாமணி யாசிரியர் திருத்தக்கதேவர், காவியம் புனைந்த 'ஆழ்வார்' கம்பன் இவர்களேயன்றி, மேலை நாட்டார்—புலவர், அறிஞர், பேரறிவாளர்கள்-முழுக்க முழுக்கக் கையாண்ட பொதுநூல் திருக்குறள். பழமைக்குப் பழைமையுமாய், பண்பட்ட சிறப்புக்கு நிலைக்களனாய் நின்று மிளிரும் உலகத் தொன்மைமொழிகள், எவ்வெவை? அவை யெல்லாவற்றிலும் விரும்பி மொழி பெயர்க்கப் பெற்று சிறப்பெடுக்கப்படும் நூல் திருக்குறள்.

வாழ்வின் பண்பும் பயனும் யாது? அன்பும் அறனும் உடைத்தாயின், அதுவே பண்பும் பயனும். ஆம், இந்த அடிப்படையில் பகுத்தறிவுள்ள மானிட வர்க்கத்துக்கு—நாடு, மொழி, இனம், குலம், ஜாதி, பாலவேறுபாடின்றி—பொது மறை வகுக்கும், அந்தமில் இன்பம் நல்கும் அறிவுக்கருவூலம் திருக்குறள். அத்தகு ஈடு எடுப்பற்ற இன்றமிழ்த்தனிநூல் உலகுக்களித்த வள்ளுவர் தோற்றதேன்?

## தோமில் புலவர் தோற்றதேன்

ஒப்புயர்வற்ற ஒரு தனிப்பெருநூலை உலகுக்கீந்த உன்னதப் புலவர் வள்ளுவர் தோற்றார்—தனது இலட்சிய ஈடேற்றத்தில், தனது கொள்கை நிலைநாட்டத்தில், தனது கோட்பாடு நிறுவனத்தில் தோற்றார்! அவரது இலட்சியம், அவர் மேற்கொண்ட கொள்கை, அவர் போற்றிப் புரந்த கோட்பாடு மக்களுக்கு இன்னும் எட்டாத கானல் நீராகவே இருந்து வருகிறது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு தோன்றி, இன்றமிழ் இலக்கியப் பூஞ்சோலையில் புதுமணங்கமழ வைத்தார் பொய்யில் புலவர். அந்த இரண்டாயிரம் ஆண்டுகட்குப் பின்னும் மக்கள் மனநிலை அன்று அன்னவர் கண்ட தன்மையிலேயே நீடித்து வருகிறது. மக்கள் கூட்டத்துக்கு—மானவாழ்வுக்கு—பகுத்தறிவுடன் பட்ட பாங்கான வாழ்வுக்கு எவை யெவை வேண்டாற்பாலன வென்று வள்ளுவர் நினைத்தாரோ, எழுதினாரோ அவையனைத்தும் இன்னும் இன்றியமையாது வேண்டற் பாலனவாயுள்ள. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வள்ளுவர் தந்த செல்வம் இன்னும் இந்நாட்டு மக்களுக்கு நிலைகுலையா, புதுக்க முடியா செல்வமாக இருந்து வருகிறது. ஈங்காண்டும் கண்டு கேட்டறியா இணையில் சீர்திருத்தப் புலவர் வள்ளுவரேயாயினும், நூற்றாண்டுகள் பலவற்றுக்கு முன்பே தோன்றி அவர் சீர்திருத்தக் கோட்பாடுகளைப் பொழிந்து பிரசாரஞ் செய்தாரேயாயினும், அவருக்குப்பின் பற்பல சீர்திருத்தக்காரர்கள் தோன்றவேண்டியிருந்தது-தோன்ற ஏது இருந்தது-தோன்றினர். சுருக்கக் கூறுமிடத்து, பரிதாபத்துக்குரிய இந்நாட்டைப் பொறுத்த வரையில் வள்ளுவர் தோன்றியிருக்க முடியாத ஒரு நிலையினையே யொத்துக் காணப்படுகிறது. வள்ளுவர் தோன்றி வாய் மலர்ந்தருளிய கருத்துக்கினிய நல்வாழ்வுக்குரிய பொன்மொழிகளனைத்தும் பயனற்றுப் போய் நிற்கின்றன! வறண்ட பாலையில் சிந்திய இன்சுவை ஆவின் பாலாயின. இந்நிலை ஏன்?

வள்ளுவர் என்ன? புத்தர் தோன்றினார்; மாவீரர் தோன்றினார்; வள்ளலார் தோன்றினார். அனைவரும் தோற்றுத்தான் போயினர். சங்கரர்-ராமானுஜர் மட்டுந்தானென்ன? சீர்திருத்தஞ் செய்ய வந்த செம்மல்கள் பற்பலரும் இந்நாட்டில் மனமுடைந்து, பெருமூச்செறிந்து, தோல்வியுள்ளத்துடன் தான் மறைந்திருக்கின்றனர்! காரணம் என்ன?

நச்சு ஊற்று புரண்டெழுகின்ற 'திருக்குளத்து' நீரை மருந்து போட்டு சுத்த (புனித)ப் படுத்தி விட முடியாது. ஊற்றுகளைத் தூர்த்து, ஏன், குளத்தையே தூர்த்து வேறு புதிய ஊற்றுக்களுக்கான புலன்களை நாடி குளம் தொட்டால் தான் மக்கள் பருகும்—புழங்கும் நீரை அதில் எதிர்பார்க்கமுடியும்.

மலேரியாக் காய்ச்சலை, கொசுக்களை ஒழிப்பதின் மூலம் தடுத்துவிட முடியாது. கொசுக்கள் உற்பத்திக்கு—பெருக்கத்துக்கு நிலைக்களனாய்த் திகழும் சாக்கடைகளை, கொசு உற்பத்தியாகும் சதுப்பு நில சமாலங்களைக் களைவது மூலமே மலேரியாக்காய்சலைத் தடைசெய்ய இயலும்.

பாதையின் குறுக்கே வளர்ந்து நிற்கும் மரம், அதன் கிளைகள் வெட்டப்படுவதால் பட்டுப் போகாது; அதன் ஆணி வேர்—சல்லிவேர் அகழ்ந்து அகற்றப்பட்டால்தான் அவ்விடத்தில் இல்லாது ஒழியும்.

திருத்தியமைப்பதால் எல்லாம் சீர்ப்பட்டு விடாது. சீர்திருத்தம் வேறு; அழிவு வேலை வேறு. சீர்திருத்தத்தால் ஒருபகுதி—ஒரு அம்சம்—வெளித் தோற்றம் சீர்ப்பட்டதாகத் தோன்றலாம். ஆனால் அடிப்படை அப்படியேதான் இருந்து வரும்; அழிவு வேலை அத் திறத்ததல்ல. அழிவினின்றும் பிறப்பது ஆக்கம். ஆக்கத்துக்குத் துணைபுரிவது அழிவு வேலையே தவிர வேறொன்றில்லை. அதுவும் நம் நாட்டைப் பொறுத்த

வரையில் சீர்திருத்தமெனப் புறப்படுவோர் 'அழிவு வேலை'யினை மேற்கொண்டால்தான் தங்கள் பணியில் எத்துணையும்—ஒரு சிறிதும்-வெற்றிக்கு அடி கோலுகிறார் என்று கூறுதல் முடியும்.

இந்நாட்டில் தோன்றிய சீர்திருத்தக்காரர்கள் எனப்படுவோர் எல்லோரும் இதனை மறந்தனர், அல்லது மறந்தொதுக்கினர். அதன் விளைவுதான் அவர்கள் தொட்ட பணி துலங்காது நிற்கிறது—மேலுமொரு புரட்சித்திட்ட சீர்திருத்தக்காரரை எதிர்பார்த்து நிற்கிறது!

"மூங்கையிருந்து கட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்". பழகியவன் நஞ்சைக் கொடுத்தாலும் அதைக் கூசாமல் வாங்கி உண்ணுமளவுக்கு உள்ளத் தூய்மையும் பொது நோக்கும் மிக்கவன் தமிழன். ஆடியும் பாடியும், கொஞ்சியும் குலவியும் கெஞ்சியும் பணிந்தும் வந்து குடியேறிய ஆரியத்துக்கு ஆதரவு அளித்ததில் ஆச்சரியமொன்றில்லை. வஞ்சமனத் தாரியரின் உள்ளக் கிடக்கையை — அவர்களின் ஆதிக்க வேட்கையை—ஓர்ந்து பார்க்க நேரம்—தின்னவிலா மற்கூட வேளாண்மையில் வன்புகழ் பெற்ற தமிழன் வந்தவர் வாழ வழியமைத்துத் தந்தான். வில்லும் வேலும், எழுத்தும் பேச்சும், அறிவும் ஆற்றலும் வஞ்சகத்துக்கு முன்பு எம்மாத்திரம்? வஞ்சகம் வாகை சூடியது! நயவஞ்சகரால் அடுத்துக் கெடுக்கப்பட்டு, தமிழன் 'அல்லோதி'க் கொண்டிருந்த வேளையில் வள்ளுவர் வந்தார்!

வந்த வள்ளுவர் செய்திருக்க வேண்டியது யாது? வஞ்சகக் கூட்டத்தின் கொட்டத்தை யடக்க—அதன் நச்சுக் கொள்கைகளைக் குழி தோண்டிப் புதைக்க அவர் செய்ததென்ன? அதற்கு அவர் ஒன்றுஞ் செய்திலர்; செய்யத் தவறினர். செய்ய அஞ்சினரா? எதிர் நீச்சலடிக்கும் துணிவிழந்தாரா?

'சீர்திருத்தம்' என்ற செப்படி வார்த்தையின் தத்துவத்தை மட்டுமே மேற்கொண்டார் வள்ளுவர். தனது புரட்சிக் கருத்துக்களும் திட்டங்களும் உருப்பெற்று நிறைவேற வழி வகை அமைக்காதவராகி, வெறும் சீர்திருத்தமெனும் 'வண்ணப் பூச்சு' வேலையில் ஈடுபட்டார் வள்ளுவர். நச்சுவற்றுக் குளத்துக்கு மருந்து போடுதல் போன்றதொரு பணியினையே மேற்கொண்டார்; அவர் உள்ளம் அவ்வளவுக்குத்தான் இடந் தந்தது. ஆரிய வஞ்சகக் கூட்டத்தின் அநியாய ஆபாச ஆதிக்க வெறித் திட்டங்களையுங் கோட்பாடுகளையும் ஆணி வேரோடு தகர்ப்பதற்கான "அழிவு வேலைத் திட்டத்தை', வகுக்க மறந்தார் அல்லது மனமில்லாதவரானார் வள்ளுவர்! திருவள்ளுவர் 'தெய்வப்' புலவராக, 'நாயனாராக' பொய்யா மொழிப் புலவராக, 'தேவராக' ஆனாரே தவிர, மக்கள் மனதில் புரட்சிக் கனலை, துயர் களையும் திட்டங்களுக்கான வித்துக்களைப் பாய்ச்சியவராக ஆகவில்லை. அவரளித்த பொன்னூல் ஒரு உயர்தர நீதி நூலாக மட்டும் ஆயிற்றே யொழிய அடிமைப்பட்ட சமுதாயத்தை நிமிர வைக்கும் செஞ்சுரம் தந்த நூலாக ஆகவில்லை! வள்ளுவர் வாக்கு தெய்வ வாக்காகக் கருதப்பட்டு வர வழியமைந்ததே தவிர ஒடுக்கப்பட்ட சமுதாயத்தை உயரவைக்கும் 'புரட்சித்திட்ட நூல்' என்று கருத-கூற-வகையின்றிப்போயிற்று! பூங்காவில், வாடாத மணக்கமழ் மல்லிகைப் பூவொன்று பெருமிதத்துடன் காட்சி யளிக்க ஏதுவாயிற்றே யொழிய, குறைப் பெற்ற மக்களை கூட்டத்தின் அவல நிலை மாறவழி யேற்படவில்லை!

அகில உலகுக்கும் 'பொதுமறை' யாக ஆகக் கூடிய—ஆகிவிட்ட அரும் பெறல் திருக்குறள்—இச்சிறு நாட்டின்—எல்லா வகையிலும் பிற நாடுகளினின்றும் வேறுபட்ட இத்தமிழ் நாட்டின்—அடிமை யொழிப்புக்கும் ஏற்றத்துக்கும் மட்டும் பயன்படுவது; அல்லது பயன் படவேண்டுமென நாம் எதிர் பார்ப்பது எங்ஙனம்!

திருக்குறள் தமிழ் நாட்டுக்கு மட்டும் ஏற்பட்ட நூலன்று; அது உலகப் பொது மறை.

திருவள்ளுவர் தமிழின் உயர்வுக்கும் மேம்பாட்டுக்குமே தோன்றிய புலவரல்லர்; அவர் உலக மனிதனை உய்விக்க வந்த ஒரே புலவர்.

திருவள்ளுவர் ஒரு சாக்ரட்டீஸோ, ஒரு லெனினோ அல்லர்; அவர் ஒரு அரிஸ்டாட்டில், ஒரு பிளாட்டோ.

---

(6-ம் பக்கத் தொடர்ச்சி)


லும் வார்டர்கள் சூழ்ந்திருந்தனர் வேட்டை நாய்களைப் போல. நாங்கள் சந்தித்துப்பேச அரைமணி நேரமே அனுமதிக்கப்பட்டிருந்தது. அதையும் நிமிடங்கள் விழுங்கிக் கொண்டிருந்தன. வார்டர்களின் பார்வை வேறு எங்கேயோ பதிந்திருந்த சமயம்—அவள் ஒரு சிறு காகிதப் பொதியை என் கையிலே வைத்தாள்.

"இது இனிப்பான பலகாரம். உங்களுக்குப் பிடித்தமானது. நானே செய்தேன்"—அவளது குரலிலே பாசம் தோய்ந்திருந்தது. இந்தக் குணத்திற்கு என்ன கைம்மாறிடுவது?"

"அரைமணி நேரம் கழிந்தது. மற்ற கைதிகளைப் பார்க்க வந்தவர்கள் வெளியே சென்றனர்...அவர்களுடன் என் 'மாஜி மனைவியும்' வெளியேறினாள் ஜெயில் வாசலைக் கடந்ததும், வெளியேயிருந்தபடி வேதனை கலந்த முகத்தோடு என்னையே பார்த்தாள். இருள் கவ்விய சிறையினுள் நான் என்னை நொந்துக்கொண்டேன்." — [illegible] பேசிமுடித்தான், ஒரு பெருமூச்சோடு.

அவனுக்கு நான் எந்த விதமான ஆறுதலைகூற முடியும்? என்றும் சிரிக்கச் சிரிக்கப் பேசி வெளியுலகச் சிக்கல்களை என் உள்ளத்திலின்று விரட்டிக் கொண்டிருக்கும் அவனது வேதனையை என்னால் எப்படித் துடைக்கமுடியும்? அவனது வாழ்வில் கடைசி ஆதாரமாயிருந்த அந்த 'அவள்'—அவனது அன்புக் கயிற்றில்தான் மோசமாக ஆடும் பம்பரமாயிருந்தாள்! இனி அவனது எதிர் காலம்...! பட்டுப் போன மரம்... ஒடிந்து போன அந்த உள்ளம் இனி ஒட்டவே ஒட்டாது!

நெஞ்சிலே தெளியும் வேதனைப் புழுக்கத்தை வெளியே இழுத்துப் போடுவதற்காக இந்தக் கடிதத்தை உனக்கு எழுதும் போது, அவன் மௌனமே, அமைதியாக தலை குனிந்தபடி இருளோடு இருளாய் ஒட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான்.........




'தம்பி நான் கள்ளன். கொள்ளையடிக்கும் கூட்டமொன்றின் தலைவன். நீ என்னைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பாய். சிம்மவர்மன் என்ற பெயர் இந்நாட்டு மக்களுக்குத் தெரியாததொரு பெயரில்லை!...நான் இப்படி நேரே வீடுகளில் இப்பொழுது நுழைவது கிடையாது. தலைவன் என்ற முறையில் இப்பொழுது எனக்கு 'வேலை' குறைவு! ஆனால் இன்று உன் வீட்டில் நுழையவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. ஆம். என் கூட்டத்தைச் சேர்ந்தவனொருவனை நீ தாக்கி அவனிடமிருந்த பொருட்களைப் பறித்துக்கொண்டு ஓடியதைக் கேள்விப் பட்டதும் நான் உன்னை நேரிலே காண பேராவல் கொண்டேன். நீ யார் என்பதை யறியவேண்டுமென்ற ஆசை என்னை உந்தித்தள்ளியது. என் ஆள் உன் வீட்டைச் சுட்டிக் காட்டினான். வந்தேன். இங்கு உன்னைக் காணவில்லை. உன் அன்னை கஷ்டத்தோடு மூச்சுவிட்டுக்கொண்டு மரணப்படுக்கையிலிருப்பதைக் கண்டேன். அவளிடம் உன் மகன் எங்கே, என்று கேட்டேன். முதலில் அவள் என்னைப் பார்த்து பயந்துவிட்டாள். பிறகு நான் அவளைப் பயப்பட வேண்டாமென்று கூறி நான் வந்த விஷயத்தை அவளுக்குச் சொன்னேன். அவள் சிரமத்தோடு நீ வெளியே சென்றுள்ளது எதற்காக என்பதை எனக்குக் கூறினாள். பிறகு தொடர்ந்து உன்னைப்பற்றிச் சொல்லி உன்னை ஆதரித்து வளர்த்திடும்படியும் கூறினாள். அந்த உதவியை நான் செய்திடுவதாக அவளுக்கு வாக்கும் தந்துவிட்டேன். தம்பி! பேசி முடித்த உடன் அன்னை சிறிதுநேரத்திற்கெல்லாம் உயிரை விட்டுவிட்டாள். அவள் உயிர் அவள் உடலிலிருந்து பிரியும்போது 'கோமளா' என்ற வார்த்தைதான் மெள்ள அவள் அதரங்களிலிருந்து பிறந்து வந்தது! தம்பி, நீ வருந்தாதே. இனி நான்தான் உனக்குத் தந்தையும் தாயும்! உன்போன்ற ஒரு வீர இளைஞனைத்தான் நான் வெகுகாலமாகத் தேடி அலைகிறேன். எனக்குப் பிள்ளை கிடையாது. நீதான் எனக்கு வாரிசாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டாய்!......நானே உன் அன்னையின் உடலை உன் தந்தையின் கல்லறையருகே அடக்கம் செய்துவிட்ட பின் நீ என்னுடன் வந்துவிடு! என்ன, கோமளா?... கோமளா, நான் உனக்கு வைத்துள்ள பெயர் என்ன தெரியுமா? வெற்றிவீரன்! ஆம். நீ வெற்றி வீரன்!

"நண்பரே, அந்த மனிதன் பேசி முடித்துவிட்டு என் பதிலுக்காக ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தான். நான் மனக்குழப்பமடைந்தவனாய், 'ஐயா, நான் உம்மோடு வருவதை — உம்மைத் தந்தையாகவும் தாயாகவும் பெறுவதைச் சிறிதும் விரும்பவில்லை. ஒரு கொள்ளைக்காரனின் ஆதரவிலே வாழ்ந்து, மக்களை வாட்டி வதைத்திடும் ஒரு கொள்ளைக்காரனாக நான் விரும்பவில்லை.' என்றேன். அவன் இலேசாகச் சிரித்தான். 'தம்பி, என்னைப்பற்றி நீ விளக்கமாகத் தெரிந்துகொள்ளவில்லைபோலும்! நான் ஒரு விசித்திரமான கொள்ளைக்காரன்! ஆம். நான் கொள்ளையடிப்பது ஏழை மக்கள் வாழ! நான் பணக்காரர்களிடம் முடங்கிக் கிடக்கும் பொருட்களைக் கொள்ளையடித்து அவை தேவைப்படும் மக்களுக்குத் தந்திடுகிறவன் கோமளா!' என்றான். என்னை அணைத்துக்கொண்டான். நான் சிறிது நேர சிந்தனைக்குப் பிறகு அவனோடு அடுத்த நாள் மலைக்குகைக்கு வந்திட ஒப்புதல் தந்துவிட்டேன். அங்ஙனமே வந்தேன். நான்கைந்து ஆண்டுகள் உருண்டோடி விட்டன. கொள்ளைக்காரனை நான் மாறி ஏழை மக்களுக்குச் சிம்மவர்மனோடு சேர்ந்து நான் செய்த உதவியை நான் நாட்டிலே ஒரு வீரனைத் திகழ்ந்திருந்தால் நிச்சயம் செய்திருக்க முடியாது! நீர்தான் இங்கு வந்து குவித்துள்ள படல்களைப் பார்த்தீரே!...சென்ற ஆண்டிலே தான் சிம்மவர்மர் இறந்துவிட்டார். இப்பொழுது நான் இக்கொள்ளைக் கூட்டத் தலைவன்!...

"நண்பரே, இன்பதாசரைச் சிறையிலிருந்து மீட்டதும், அவர் தொடையிலே அந்த வேரினைப் பொருத்தியதும், இந்த அழகோவியங்களைக் கொள்ளையடித்துக் கொண்டுவந்து இங்கு மாட்டி வைத்திருப்பதும் என்செயல்கள் தாம்! நண்பரே, இப்பொழுது உமக்கு எல்லாவற்றையும் கூறிவிட்டேன். உம்முடைய சந்தேகங்கள் நிவர்த்தியாகிவிட்டிருக்குமென்று எண்ணுகிறேன்!"

கோமளவர்மன் தன் பேச்சை முடித்தான். 'ஆம். நண்பரே, எனக்கு இன்றைக்குப் பலப்பல விஷயங்கள் தெரிந்துவிட்டன. சந்தேகங்களும் தீர்க்கப்பட்டுவிட்டன!' என்றான் பரிவின்பன்.

"நண்பரே, இன்னொன்று! நான் கொள்ளையடித்து வந்த பொருட்களில் ஏழை மக்களுக்கு வழங்காமல் வைத்திருக்கும் பொருள் மற்றொன்று இருக்கின்றது. அதைப் பாரும்!" என்று கூறிவிட்டு அடுத்திருந்ததொரு சிறு அறையினுள் சென்று ஒரு அழகிய முத்துமாலையுடன் திரும்பினான் கோமளன்.

முத்துமாலை பரிவின்பனின் கண்களையும் கருத்தையும் கவர்ந்தது. ஏனோ அந்த முத்துமாலை அவன் மல்லிகாவை அவனை நினைக்க வைத்தது! அழகியவளின் கழுத்திலே அது தவழ்ந்தால்!...ஆசை கலந்த எண்ணம் அவனை உலுப்பியது. அந்த முத்துமாலையைக் கோமளனிடமிருந்து வாங்கி ஆசை

(15-ம் பக்கம் பார்க்க)

# வடநாட்டுக் கவர்னர் வருகிருர்!

## நாடெங்கும் கண்டன முழக்கம் எழுப்புங்கள்!

### அறிஞர் அண்ணுவின் அறிக்கைகள்

### கண்டன நாள
### 12—3—52

வட நாட்டு ஆதிக்கத்தின் அறிகுறியாகவும், காங்கிரஸ் பாசிச முறையின் ஒரு கூறுகவும், சென்னை கவர்னராக ஒரு வடநாட்டுக் காங்கிரஸ் தலைவர் நியமிக்கப்பட்டிருக்கிருர். திராவிடநாடு திராவிடருக்கே என்ற கொள்கைக்காகப் போராடும் திராவிட முன்னேற்றக் கழகம், இந்த வடநாட்டு ஆதிக்கத்தை வன்மையாகக் கண்டிக்கிறது.

இன்றுள்ள நிலையில், திராவிடநாடு, வடநாட்டுக்கு அடிமை என்ற நிலையை உறுதிப்படுத்தவும், அடிமைத்தனத்தை வளர்க்கவுமே, இந்திய அரசியல் சட்டம் பயன்படுகிறது. இந்த ஆதிக்கத்தை தி. மு. க. நாடெங்கும் விளக்கிக் கண்டிக்கவேண்டும். வடநாட்டு ஆதிக்கத்தைக் கண்டிக்க, 12—3—52 அன்று நாடெங்கும் கண்டன நாள் கூட்டங்களை நடத்தி, இன்றுள்ள வடநாட்டு ஆதிக்கத்தை மக்களுக்கு எடுத்து விளக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

1. வடநாட்டு ஆதிக்கம் கூடாது.

2. கவர்னர் நியமனம் கூடாது. கவர்னர்களும் பொது மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

3. காங்கிரஸ் கட்சித் தலைவர் ஒருவரைக் கவர்னராக நியமித்ததைக் கண்டிக்கிறோம்.

என்ற இந்த மூன்று கருத்துகளைக் கொண்டே, கண்டன நாள் நடைபெற வேண்டுமென விரும்புகிறேன். எல்லாக் கிளைக்கழகங்களும் கண்டன நாள் நடத்தி, திராவிடத்தின் தீர்ப்பை வடநாடு அறியச் செய்ய வேண்டுகிறேன்,

**அண்ணதுரை.**

### சென்னையில் கருப்புக்கொடி

வடநாட்டுக் கவர்னருக்குக் கருப்புக்கொடி காட்டவேண்டும் என்று திராவிடர் கழகம் தீர்மானம் செய்து, நாள் குறித்திருக்கிறது.

வடநாட்டு ஆதிக்கத்தை நாம் வெறுக்கிறோம் என்பதன் அறிகுறியாகக் கருப்புக்கொடி காட்டப்பட வேண்டும் என்று திராவிடர் கழகம் கூறுவது, முற்றிலும் நியாயமானதும் அனைவரும் வரவேற்கவேண்டியது மாகும்.

வடநாட்டுக் காங்கிரஸ் பாசிசம் திராவிடத்தின் எழுச்சியை அறிய இந்தக் கருப்புக்கொடி பிடித்தல் உண்மையாகவே ஒரு அரிய வாய்ப்பாகும்.

இதிலே கலந்து, வெற்றியை மேலும் வலுவுள்ளதாகச் செய்யவேண்டும் என்ற ஆர்வம் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு இருக்கிறது.

ஆனல், கருப்புக்கொடி நாள் நடத்துவதாக அறிவித்திருக்கும் திராவிடர் கழகம், நாம் தீண்டுவதையும் தீண்டக்கூடாது என்ற திட்டத்தைத் தெரிவித்து விட்டதால், தி. மு. க. இந்தக் கருப்புக்கொடி காட்டும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது கூட்டுறவு, ஒத்துழைப்பு, கலப்பு, தங்கள் முயற்சியைக் கெடுத்துவிட்டது, என்று பழி சுமத்தவும் திராவிடர் கழகத்தில் பெரும் பகுதியினர் முன்வரக்கூடும். அவர்களும் கலந்துகொள்வதானல் அந்தக் காரியமே வேண்டாம், என்று ஒரு பகுதியினர் எண்ணக்கூடும். எனவே, திராவிடர்கழகம், தனித்தன்மையுடன் கருப்புக்கொடி காட்ட இடமளித்துவிட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தார் 12—3—52 அன்று நாடெங்கும் கண்டன நாள் நடத்தித்தரக் கேட்டுக்கொள்கிறேன்.

**அண்ணதுரை.**

# புதிய உலகு—புதிய கல்வி!

[ இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ. ]

'புதியதோர் உலகம் செய்வோம்' என்ற பேரொலி, உலகப் பொது மன்றங்களிலெல்லாம் இன்று முழக்கப் பெறுகின்றது. மக்கள், தாம் வாழ்வதற்கேற்ற சூழ்நிலையை ஏற்படுத்தவும், அச்சூழ்நிலையில் நிலைத்து நிற்கவும் போதிய அறிவும், ஆற்றலும் பெற வேண்டியவர்களாகிறார்கள். மக்களின் அறிவாற்றலைச் செம்மைப் படுத்தும் கருவி கல்வியேயாகும். எனவேதான் "புதியதோர் உலகம் சமைக்கப் புதியதோர் கல்வி முறை தேவை" என்பதை ஆக்ஸ்பர்ட் பல்கலைக் கழகத் தலைவேந்தர் சர். ரிச்சர்டு லிவிங்ஸ்டோன் உலகறிய எடுத்தியம்பியுள்ளார்.

அன்றாட நிகழ்ச்சிகளை ஆய்ந்தறிந்து, வாழ்வுக்கேற்ற வண்ணம் அமைத்துக்கொள்ளும் திறமை, இளைஞர்களுக்கு ஏற்படவேண்டும். "முழுவாழ்வு வாழ்வதற்கான வகையில் நம்மைப் பக்குவப்படுத்தும் பண்பு கல்வியின் நீங்காக் கடமையாகிறது" என்று ஆங்கிலப் பேராசிரியர் ஹெர்பர்ட் ஸ்பென்சர் கூறியுள்ளார். மக்கள் உள்ளம் பண்புபெற, பயிற்சி பெறவேண்டும். அத்தகைய பயிற்சியைக் கல்விதான் அளிக்கும். இன்று, பெரும்பாலான மக்கள் உள்ளங்களில் சூதும், வாதும், வஞ்சமும், பொறாமையும், சுயநலமும் குடிகொண்டிருக்கின்றன. வாழ்விலே ஏழ்மையும், பசியும், பிணியும் வாட்டுகின்றன. இந்த நிலை மாறவேண்டுமானுல், புதிய, நல்ல, தேவையான, பயிற்சியை மக்களுக்குக் கொடுக்க வேண்டும். வாழ்வை வளமாக்கும் புதிய கல்விமுறை வகுக்கப்பட்டாலன்றி, புதியதோர் உலகம் காண இயலாது.

புதுமையுலகு என்றும், புதுமைக் கல்வி என்றும் சொல்லும்போது, புதுமை என்னும் சொல் எப்பொருளைத் தழுவி நிற்கின்றது என்பதை அறியவேண்டும். பழமையினின்றும் வேறுபட்டு, காலத்தினுல் வேறுபாடு உணர்த்தி நிற்பதும் புதுமை என்று சொல்லப்படும்; பயன்பெறும் நெறி குறித்து வேறுபாடு உணர்த்தி நிற்பதும் புதுமை என்று சொல்லப்படும். இங்கு பயன்பெறும் நெறி குறித்துப் புதுமை உணர்த்தி நிற்பதையே 'புதுமை' எனக் கொள்கிறோம். வள்ளுவரும், கம்பரும் காலத்தினுல் பழமைக்குரியவர்கள்; என்றாலும் கருத்தினுல் கம்பரைக் காட்டிலும் வள்ளுவர் புதுமைக்குப் பொருந்தக் கூடியவர். காலத்தினுல் பழமையானவை, கருத்தினுல் புதுமைக்கு ஏற்குமானுல் புதுமையின்பாற் பொருத்தியே கொள்ளப்படும்.

புதிய உலகத்தின் தேவைகளை உணர்ந்துகொண்டால்தான் அதற்கான கல்விமுறை தெளியப்படும். புதிய உலகத்தின் தேவைகளையும், அவற்றில் முக்கியமானவற்றையும் உணரவேண்டும்.

மக்கள் வாழ்வைத் தாங்கி நிற்கும் அரசியலமைப்பு, பொருளாதாரம், வாணிபம், பண்டமாற்று, வெளிநாட்டுத் தொடர்பு, உலக உறவு ஆகியவை ஒருபுறமும், இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக விளங்கும் அறிவியலும் (Science) அதன் விளைவுகளும் மற்றொரு புறமும் வாழ்க்கையின் தேவைகளாக விளங்குகின்றன. இவற்றைச் செம்மையுறப் பயிற்றுவிக்கும் முறையைக் கல்வித்துறை பெற்றிருக்கவேண்டும். அதாவது சமுதாய அறிவியல்களும், (Social Sciences), இயற்கைப் பொருள் அறிவியல்களும் (Natural Sciences). பாடப்பகுதிகளாக அமையும் கல்வி புதிய உலகத்தின் தேவைகளை நிறைவேற்றச் செய்யும்.

மக்களெல்லோரும் இயற்கை ஆற்றல்களின் தன்மையையும், பொருள்களின் மாறும் பண்பினையும், சாமான்கள் செய்யப்படும் முறையையும், அவற்றைப் பரப்பிவிடும் வகையையும், பொதுச் செயல்களின் அமைப்பையும், அவற்றின் கட்டுப்பாட்டையும், அவற்றில் தமக்குள்ள பங்கையும், நாடுகள் ஆகியவற்றை ஆளும் முறையையும் ஒரு சிறிதாவது அறிந்திருக்க வேண்டியவர்களாகிறார்கள். பொருளாதார வாழ்வையும், சமுதாய பழக்க வழக்கங்களையும் மாற்றவும், அழிக்கவும், வளர்க்கவும் வல்லமையுள்ள ஆற்றல்களை (Forces) அறிந்துகொள்ள வேண்டியது மக்களின் இன்றியமையாக் கடனாகிறது. இந்தத் தேவைகளுக்கேற்ற பயிற்சியை அளிக்கும் கல்வி புதிய உலகத்திற்கு ஏற்றதாக அமைகிறது.

மேலே குறிப்பிட்ட சமுதாய அறிவியற்றுறைகள், இயற்கைப் பொருள் அறிவியற்றுறைகள் ஆகியவற்றை, வாழ்க்கையின் தேவைகளாகப் பயிலும் கல்வியில், மதம், மொழிகள், கலைகள், இசை, இலக்கியம் வரலாறுபோன்றவைகள் வேண்டிய அளவுக்கு மேல் இடம் பெறவில்லை. காரணம் இவைகளெல்லாம் மனிதனின் நல்வாழ்வுக்கான தேவை நிறைவேற்றப்பட்ட இடத்திலிருந்து தொடங்கப் பெறுகின்றன. ஆகவேதான், புதியவுலகத்தை உருவாக்கும் கல்வி முறையில் இவைகள் மிகவாகச் சேர்க்கப்படாமல் ஒதுக்கிவைக்க வேண்டிய நிலையை அடைகின்றன. இல்லையாயின் கல்லூரி குழப்பமுண்டாக்கும் கொட்டிலாகமாறும். உள்ளம் பெரும் பளுவைத்தாங்க முடியாமல் நெளிந்து, வளைந்து, ஓய்ந்து உட்காரும். இவற்றினுல் ஏற்படும் பயன் குறிப்பிட்ட அளவுக்குள்ளாவதால், இவற்ருல் குறைந்த அளவு நன்மை ஏற்படுமென்றாலும் அறிய வியலாத எல்லையிலும் அறிந்துவிட்டதாகக் கொள்ளப்படும் எண்ணத்தால் துன்பமே மிகவாக ஏற்படுகின்றது. எனவேதான், இன்றியமையாத தேவைகளை நிறைவேற்ற வகுக்கப்படும் கல்வி முறையில், இவைகளுக்கு முக்கிய இடம் தொடுக்கப்படவில்லை.

கல்லாதவர்கள் உலகுக்கே பெருங்கேடாகக் காட்சியளிக்கிறார்கள். அவர்களை விட மிகமிகக் கேடுபயப்பவர்கள் அரைகுறைப் படிப்பாளர்கள். இவர்கள் தம்

கள் அரைகுறைக் கல்வியறிவைக் கொண்டு முற்றும் உணர்ந்தவர்களாகத் தங்களைத் தாங்களே நினைத்துக் கொண்டு செயலாற்றுங்கால் ஏற்படும் கேடு மிகப் பெரிதாக அமைகிறது. இத்தகையோரின் எண்ணிக்கையைக் குறைக்கும் கடமை, கல்வியைச் சார்ந்ததாகிறது. தேவையான கல்வியறிவைக் கொடுத்தால் மட்டும் போதாது; எந்தக் கல்வியறிவு தேவை என்பதை உணர்த்த வேண்டும். உணர்த்தினால் தான் அவ்வழியே உள்ளம் தானாகச் செல்ல ஏதுவேற்படும்.

அறிவியல் (Science) பொருள்களின் உண்மையை உணர்த்தி, அவற்றின் இயக்கத்தைக் கூறி, அவற்றின் விளைவுகளைக் காட்டி, அவற்றைப் பயன்படுத்தும் வழிகளில் நம்மைக் கொண்டுபோய் நிறுத்திவிட்டுச் செல்கிறது. வாழ்க்கைப் பாதையில், நம்மை அழைத்துச் செல்ல வழிகாட்டியாக அமையும் கல்வி, அறிவியலின் துணையை மிகநெருங்கிப் பெற்றால்தான் பயன்படும் வழிகள் அதற்குத் தெரிய இயலும். ஆயிரமாண்டுகளாகச் சிறுகச் சிறுக வளர்ந்துவந்த அறிவியல், இற்றைப் பொழுது மனித வாழ்வின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக விளங்குகிறது. அறிவியலின் பாகுபாடுகள், பல்வேறு துறைகளில் பொருத்தப் பெற்று, மனிதனின் உழைப்பினைக் குறைத்து, பயனைப் பெருக்கி, இன்பத்தைப் பயந்து வாழ்வை வளமாக்குகின்றன.

ஆத்மீகக் கல்விதான் உலகவாழ்வில் பேரின்பம் பயக்கும் என்றும், அறிவியற் கல்வி அழிவைத்தான் பயக்கும் என்றும் பொதுவாகக் கூறப்படுகின்றன. கீழ்நாட்டைச் சேர்ந்த நம் நாட்டில், இக்கருத்து மேதாவி என்று கருதப்படும் பலராலும்கூடக் கொள்ளப்படுகின்றது. அறிவியற் கல்வியில் மிகவாக அக்கறை காட்டும் நாடுகள் தாம், இன்று உலகில் மேலோங்கி நின்றன. இந்திய துணைக்கண்டம் சிறிது சிறிதாக முன்னேற்றமடைவதற்குக் காரணம், ஆத்மீகக்கல்வி நிரம்பப் பெற்றிருந்ததினால் அல்ல; பொருத்தப் பெற்ற அறிவியல் (Applied Science) நாளுக்கு நாள் வளர்ந்து வருவதாலேயாகும்.

உலகப் பெரும்போர் இரண்டு ஏற்பட்டுப் பேரழிவு பயந்ததற்கு அறிவியலே (Science) காரணம் என்று கூறுவர். அறிவியல் எப்படிப் போரிடலாம் என்பதைச் சொல்லிக் கொடுத்ததே யொழிய, ஏன் போரிடவேண்டும் என்பதைச் சொல்லிக்கொடுக்கவில்லை. அறிவியல் அடிமை வேலை செய்யும் வேலைக்காரனே யொழிய, நம்மை ஆட்சி செய்யும் ஆண்டான் அல்ல. அது நச்சுக் காற்றையும், அணுகுண்டையும் ஏந்தி யிருப்பது போலவே, பென்சிலின் மருந்தையும், மின்னொளியையும் ஏந்தியிருக்கிறது. அது கொடுக்கிறது; வாங்கும் பொறுப்பு நம்மைச் சார்ந்தது. நாம் அணுகுண்டை விரும்பினால் அறிவியல் அதனைத் தருகிறது. அது அதனுடைய குற்றமல்ல; குற்றம் நம்மைச் சார்ந்தது; காரணம் பொறுக்கிக்கொள்ளும் வாய்ப்பு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

புது உலகில் உலவுவதற்கேற்ற வகையை அறிவியற்றுறைகள் நமக்குச் செய்து தந்தாலும், அவைகள் நம்மை அழைத்துச் செல்ல இயலாத பகுதியும் இருக்கிறது. கல்வி பயிற்றுவிக்கவேண்டியவை—அறிவை வளரச் செய்தல், உள்ளத்தை விரிவாக்குதல், உள்ளத்தை அவாவுறச் செய்தல், புது உலகத்திற்குத் தேவையான தொழில் நுட்பங்களை அறியச் செய்தல் ஆகும். இவையெல்லாம் அறிந்த பிறகுகூட மனித வாழ்வு இன்பபுரியின் வாயிற்படியை எட்டிப் பார்க்குமா என்பது ஐயப்பாடாக இருக்கின்றது. வாழ்வுக்குத் தேவையான பொருளாதாரம், அறிவியல், தொழில் நுட்பங்கள், அமைப்புகள் ஆகியவை பண்பட்டாலும், மக்கள் பண்படவேண்டியிருக்கிறது. மக்கள் ஆணவம், ஆணை, அணுகுண்டு ஆகியவற்றால் ஆளப்படுவதா, அல்லது அன்பு, அழகு, பகுத்தறிவு ஆகியவற்றால் ஆளப்படுவதா என்பதை முடிவு செய்ய வேண்டும்.

எவ்வளவுக் கெவ்வளவு அறிவியல் நமக்கு ஆற்றலைக் கொடுக்கின்றதோ, அவ்வளவுக் கவ்வளவு நாம் நன்மையையும் செய்யமுடியும். தீமையையும் பயக்க முடியும். ஏழை மனிதனும், அவனைப் போன்றார் நிரம்பிய ஏழ்மை உலகும் வறுமையின் வாய்ப்புக்கு உட்பட்டிருப்பதால், குறைந்த அளவு தீமையைத்தான் தம் ஆற்றலால் செய்ய இயலுகிறது; ஆனால் சொத்து ஏற ஏறத் தீமை பயக்கும் அளவும் ஏறுகிறது. நம்மிடத்தில் இயற்கை அளித்திருக்கும் ஆற்றல் தீமையைச் செய்யவும் பயன்படுத்தப்படுவதால், நாம் விரும்பும் கல்வி ஆற்றலை எப்படிச் செலுத்துவது என்பதைக் கற்றுக் கொடுப்பதோடல்லாமல், எப்படி நல்ல வழியில் செலுத்துவது என்பதையும் கற்றுக்கொடுக்க வேண்டும்.

மக்கள் நல்ல வழியில் செல்லப் பெருந்தன்மை உள்ளத்தில் குடியேற வேண்டும். பெருந்தன்மை ஏற்படக், காட்டுமிராண்டிக் காலத்திலிருந்து அறிஞர்கள் காட்டிய பொன்செயல்களும், கண்ட கனவுகளும் மாணவர்கள் முன்நிறுத்தப்பட வேண்டும். காலத்திற்கும், கருத்திற்கும் ஒவ்வா மூடக்கட்டுக் கதைகளும் குருட்டு நம்பிக்கைகளும் ஒழிக்க, பகுத்தறிவு செய்து காட்டியபெருஞ் செயல்கள் உணர்த்தப்பட வேண்டும். பெருஞ்செயல்களை வரலாற்றிலிருந்தும், பெருங்கனவுகளை இலக்கியத்தினின்றும் தொகுத்து எடுத்துப் பாடமாக்கப்பட வேண்டும். அவற்றைப் பாடமாக்கினால் உள்ளம் பண்படும் பெருந்தன்மை பெறும். எண்ணும் பொழுதும், சொல்லும் பொழுதும் செயலாற்றும் பொழுதும் பகுத்தறிவின் பாற்பட்ட பெருந்தன்மை விளங்க வேண்டும். வெறியையுண்டாக்கும் மதவுணர்வும் அறிவை அடகுவைக்கச் செய்யும் பொய்ப்புராணக் கதைகளும், பகுத்தறிவை அழிக்கும் காவியக் கதைகளும், இயமறிய வரலாறுகளும் பெருந்தன்மையைப் பயக்கா; பயந்ததில்லை.

பெருந்தன்மைப் பண்பு நடுவே நிறுத்தப்பட்டு அவற்றைச் சுற்றி வாழ்க்கையின் தேவைகளை நிறைவேற்றும் துறைகள் இணைக்கப்பட்டால், வாழ்வு வளமுறும். அறிவி


**போர்வாள்**

**சந்தா விவரம்**

ஓராண்டு ரூ. 6—8—0
6 மாதம் ரூ. 3—4—0

போர்வாள் அலுவலகம்
181, பிராட்வே, சென்னை 1.

ரால் இணைக்கப்படும்போது அறிவு வளரும். உலகம் மனிதன் ஆளு கைக்குக் கட்டுப்படும். அரசியலும் பொருளியலும் இணைக்கப்பட்டால் நல்வாழ்வு நடத்துவதற்கேற்றபடி சமுதாயத்தை உருவாக்கவும், உயர் வடையச் செய்யவும் இயலும். மொழிகள் இணைக்கப்பட்டால் ஒரு இனம் மற்றோர் இனத்தோடு கலந்து ஒன்றுவும். உலகப் பொது அறிவு வளரவும் பயன்படும். கைத்தொழி லும், பண்டமாற்றும் இணைக்கப் படும்போது மனித சமுதாயத்தின் அவசியங்கள் நிறைவேற்றப்படும். இவற்றை யெல்லாம் மக்கள் எல் லோர்க்கும் கொடுக்கும் வாய்ப்பை உண்டாக்கும் கல்விமுறை ஏற்பட் டால், புதியதோர் உலகை உரு வாக்க ஏதுவாகும். அப்பொழுது "புதியதோர் உலகம் செய்தோம்" என்று குன்றின் மீது நின்று முழங் கலாம்! வாழ்வு, அன்பு, அழகு, அறிவால் எழில் பெற்று விளங்கும்.

---

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

நிரப் பார்த்தான். சிறிது நேரங் கழித்து,

"நண்பரே, ஒன்று கேட்கி றேன். ஆம். உமக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தந்து விடுகிறேன். இந்த முத்து மாலையை எனக்குத் தாரும்!" என்றான்.

"மன்னிக்கவேண்டும நண்பரே! இந்தப் பொருளை நான் இவ்வளவு பத்திரமாகக் கட்டிக் காவல்புரிந்து வருவது வேறொரு காரணத்திற் காக. ஆம். இது முல்லை நாட்டு மன்னர் முத்துவீரனின் தேவியா ரின் கழுத்திலே இருந்த மாலை. அவர்கள் இறந்துவிட்டதும் இதை நஞ்சநாதன் திருடித் தன் மனைவி யின் கழுத்திலிட்டு அழகு பார்த்து வந்தான். அந்த அநியாயத்தைச் சகியாத நான் இதைக் கொள்ளை யடித்து வந்துவிட்டேன். இது மீண்டும் முல்லை நாட்டு மக்கள் தலைவியின் கழுத்தில்தான் தவழ வேண்டும்! அதைச் செய்யவேண் டியது என் பொறுப்பு! எனவே மன்னிப்பு வேண்டுகிறேன்!" என்று பதிலளித்தான் கோமள வர்மன்.

பரிவின்பனின் முகம் சுருங்கி யது. அவன் ஆசையை அணைத்திட் டன கோமளனின் வார்த்தைகள்.

சிறிது நேரம் பேசாமல் நின்றான். பிறகு, "சரி நண்பரே. நான் அதை அறியாமல் கேட்டுவிட்டேன். மன் னிக்கவும்," என்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

"நண்பரே, தேன் கூட்டிலேயே வெகுநேரம் பேசிக்கொண்டிருந்து விட்டோம்! ஓ! அதைக்கூற மறந்து விட்டேனே! இந்த அழகிய இனிய பொருட்களை வைத்திருக்கும் இந்த அறைக்கு நான் வைத்துள்ள பெயர் 'தேன்கூடு' வாரும். படுத் துறங்கிக் களைப்பாறிக்கொள்ளும். உதயா! வா." என்றவர்களை அழைத்தான் கோமளன்.

மூவரும் படுத்துறங்கச் சென் றனர்.

(தொடரும்)

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பொழிவுகள், இன்பத் தேன் துளிகளென, மக்கள் இதயத் தில் மகிழ்ச்சியையும் எழுச்சியை யும் கிளர்ந்தெழச் செய்தன.

இறுதில், அண்ணா நம ஆதர வாளர்களை வெற்றிப் புன்னகை யுடன் வீர உலா வரும்படி செய்த திராவிடப் பெருங்குடி மக்களுக்குத் தன் நன்றியைத் தெரிவித்து அரை மணி நேரம் சொற்பொழிவாற்றிய பிறகு, கூட்டம் இனிது முடிவுற்றது.

தி. மு. க வின் இந்த வெற்றி விழா, சென்னையில், மாற்றார் உள்ளத்தில், மகத்தான அதிர்ச் சியையும் அச்சத்தையும் உண் டாக்கியிருக்கிறது. அதே நேரத்தில், திராவிடத் தோழர்க ளின் உள்ளத்திலெல்லாம் ஆனந்த ஆர்வத்தை அலைமோதச் செய்திருக்கிறது

திராவிடத் தனியரசுப் பிரச் சினை நாளுக்கு நாள் எவ்வளவு பலம் பெற்றுவருகிறது என் பதை எழில்பட எடுத்துவிளக் கும் அரிய கருவியாக அமைந் திருந்தது இந்த வெற்றி விழா.

வாழ்க வெற்றி வீரர்கள்! வெல்க திராவிடம்!

---


# செந்தமிழருக்கேற்ற செந்தேன் சுவடிகள்

## மா. இளஞ்செழியன் தீட்டியவை

| | ரூ. அ. |
|---|---|
| இந்திய அரசியல் திட்டம் | 2 - 0 |
| தமிழன் தொடுத்த போர் | 1 12 |
| சர்க்கார் சாம்ராஜ்யம் | 0 - 10 |
| திராவிடஸ்தான் வேண்டாமா | 0 - 8 |

## இராதாமணாளன் இயற்றியவை

| | |
|---|---|
| மனப்புயல் | 2 0 |
| மூடு ணி | 1 0 |
| டாலிவனம் | 0 10 |
| துளிதேன் | 0 8 |
| புதுவெள்ளம் | 0 8 |
| மயானத்தில் முத்தம் | 0 8 |
| பேசும் பிணம் | 0 8 |
| சந்தலீலா | 0 8 |
| இன்பக் கனவு | 0 8 |
| பெண் | 0 8 |

## மு. வரதராசன் எழுதிய புதிய நூல்

| | |
|---|---|
| மனச்சான்று | 0 12 |
| பச்சையப்பர் | 1 4 |
| பெற்ற மனம் | 4 4 |

## மு. கருணாநிதி எழுதிய புதிய நூல்

| | |
|---|---|
| பெருமூச்சு | 1 0 |
| களத்தில் கருணாநிதி | 1 0 |
| பள்ளிவாசல் | 1 0 |

## ஆசைத்தம்பி எழுதிய புதிய நூல்

| | |
|---|---|
| தியாகச் சுடர் | 0 12 |
| நினைவுச் சுழல் | 0 12 |
| பிணங்கள் | 1 0 |

## நாரண துரைக்கண்ணன்

| | |
|---|---|
| தன்மதிப்பு இலக்கத் தோன்றல்கள் | 0 8 |

## தில்லை-வில்லாளன் எழுதியவை

| | |
|---|---|
| துரோகி | 2 0 |
| மனப்போர் | 1 0 |
| தங்கத்தாமரை | 1 0 |

## பகுத்தறிவுப் பாசறை

131, [illegible] 1.


Edited Printed and Published by P. C. Manickavachag m alias Kanchi [illegible] at [illegible] Printers
147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan B.A. (Hons.)